இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

மே 2012 May | இதழ் 256 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION







ஒன்ராறியோ அரசின் 'ஜூன் கோல்வூட்' முதன்மைச் சாதனையாளர் விருது



நீதன் சண்
ஒன்ராறியோ என். டி. பி.
தலைவர்

ஊடக வன்முறை





**மே 18 போர்க்குற்ற நாள்**

**மே 19 மீள் எழுச்சி நாள்**

22 வது ஆண்டு
22nd Year

Growing with the Community
ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

தமிழர் தகவல் TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

# ஒரு கொலை முயற்சி!

மகிந்த ஆட்சியில் இடம்பெறும் கோதபாயவின் வன்முறைக் கலாசாரம் கனடாவிற்கும் வந்துவிட்டதுபோல் தெரிகிறது. உலக ஊடக சுதந்திர தினத்தை (மே 3ஆம் திகதி) அனுஷ்டிக்கச் சர்வதேச ஊடக அமைப்புகள் ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையில் இந்தச் சந்தேகம் ஏற்பட்டதற்குக் காரணமுண்டு.

ரொறன்ரோவிலிருந்து வெளிவரும் 'கனடா உலகத் தமிழர்' வார இதழின் ஆசிரியரும் வெளியீட்டாளருமான ந. கமலவாசனின் (கமல்) வாகனம், அவரது இல்ல வளவுக்குள் வைத்து நள்ளிரவு வேளையில் தீக்கிரையாக்கப்பட்டதையே இங்கு குறிப்பிடுகின்றோம். கடந்த மாதம் 23ஆம் திகதி அதிகாலையில், 'இனம்தெரியாத' என்ற அடையாளத்தில் இந்த வன்செயல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ரொறன்ரோ நகர காவலர்கள் இது தொடர்பான தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் மீது எமக்கு அபார நம்பிக்கையிருப்பதால், சூத்திரதாரிகள் நிச்சயம் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவார்கள் என நம்புகின்றோம்.

கனடிய தமிழ் ஊடகவியலாளர் இணையம் தனது கண்டன அறிக்கையில், பூரணமான சுதந்திரமுள்ள கனடிய நாட்டில் ஒரு சுதந்திரமான ஊடகவியலாளரை மையப்படுத்தித் திட்டமிட்டு அவரது வாகனம் தீமூட்டி எரிக்கப்பட்டதை ஒரு கொலைப்பயமுறுத்தல் எச்சரிக்கையாகவே கருதவேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

கமலவாசன் ஒரு குடும்பத் தலைவர். மனைவியுடனும் பிள்ளைகளுடனும் அந்த இல்லத்தில் நீண்ட காலமாக வசித்து வருகிறார். அவரது வாகனம் எரிக்கப்பட்ட வேளையில், பற்றிப்பரவிய தீ அவரது இல்லத்திலும் தாவியிருக்குமானால் என்பதை நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் மறுக்கின்றது.

2009க்குப் பின்னர் கமலவாசன் பல தடவை அச்சுறுத்தப்பட்டு, பொது இடங்களில் வைத்துத் தகாத வார்த்தைகளால் எச்சரிக்கப்பட்டு, கடத்தல் பயமுறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக சிலர் மீது விசாரணை நடைபெற்று சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாயக விடுதலை, போர்க்குற்றம் புரிந்த இலங்கை அரசு மீதான நடவடிக்கை, கனடிய அரசு இது தொடர்பாக மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் என்பவற்றைக் 'கனடா உலகத் தமிழர்' பத்திரிகை பூரணமாக ஆதரித்து வருவதை அறிவோம். இது அந்தப் பத்திரிகைக்குரிய சுதந்திரம். இதனை ஏற்காதவர்கள் அதனை விமர்சிக்கலாம்; அது அவர்களுக்கான சுதந்திரம்.

கருத்தைக் கருத்தால் மோத நெஞ்சுரமின்றி, நள்ளிரவில் அவரது இல்லம் சென்று வாகனத்தைத் தீக்கிரையாக்கியதன் மூலம், அவர் மீதும் அவரது குடும்பத்தின் மீதும் கொலைமுயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டதாகவே அச்சப்பட வேண்டியுள்ளது.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் யாராகவிருந்தாலும் அவர்களை அடையாளம் காட்டி, சட்டத்தின் முன்னால் நிறுத்த வேண்டியது சமூகப் பொறுப்புள்ள ஒவ்வொருவரதும் கடமை.

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல் TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editor
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த வேலையையும் ஏற்க மறுத்தால் வேலையற்ற கால காப்புறுதிக் கொடுப்பனவு நிறுத்தப்படும்!

கனடாவில் நீண்டகாலமாக நடைமுறையிலிருக்கும் வேலையற்ற கால காப்புறுதி (Employment Insurance - EI) கொடுப்பனவில் பாரிய மாற்றமொன்றைக் கொண்டுவர அரசாங்கம் முன்னறிவித்தல் கொடுத்துள்ளது.

"வேலையற்ற கால காப்புறுதி பெறும் ஒருவர், அந்தக் காலத்தில் எந்த வேலை கிடைத்தாலும் அதனை ஏற்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு வேலை மட்டுமே வேண்டுமென்று கிடைக்கும் மற்றைய வேலைகளை ஏற்க மறுத்தால், வேலையற்ற காலக் காப்புறுதிக் கொடுப்பனவு நிறுத்தப்படும்" என்று குடிவரவு அமைச்சர் ஜேசன் கெனி அறிவித்துள்ளார்.

"What we will be doing is making people aware there's hiring going on and reminding them that they have an obligation to apply for available work and to take it if they're going to qualify for Employment Insurance" Minister Kenney Announced.

வெளிநாட்டவர்களை இறக்குமதி செய்து அவர்களால் நிரப்பப்படும் காலி வேலையிடங்களை, உள்நாட்டில் வேலையற்ற காலக் காப்புறுதியில் இருப்பவர்களைக் கொண்டு நிரப்புவதே இந்தத் திட்டத்தின் உள்நோக்கம்.

நொவோஸ்கோஷியாவில் கிறிஸ்மஸ் காலங்களில் சவுக்கு மரங்களை வெட்டுவதற்கு மெக்சிக்கோவினரையும், பிரின்ஸ் எட்வேட் ஐலன்டில் மீன் தொழிற்சாலைகளில் ரஷ்யர்களையும், நியுபிறுண்ஸ்விக் மாகாணத்தில் சொக்கலேட் தொழிற்சாலைகளில் றொமானியர்களையும் கொண்டுவந்து வேலை செய்வதை நிறுத்த வேண்டுமென்பதால், உள்ளூர் ஆட்களை அதற்குப் பயன்படுத்த அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வருகின்றது.

"காப்புறுதி வேண்டுமென்றால் கிடைக்கும் தொழிலைச் செய்" என்பதே புதிய திட்டத்தின் அடிப்படை அம்சம்.

# கனடாவுக்கு அகதிகள் வருவது நிறுத்தப்படும் காலம் அண்மிக்கிறதா? சட்ட மாற்றங்கள் தரும் சந்தேகம்!

## Future of Refugees in Question

கனடிய குடிவரவுச் சட்டத்தில் 'எக்ஸ்பிரஸ்' வேகத்தில் பல 'அடிதடி' மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்றது என்றும், இதற்கான சட்ட முன்னறிவித்தல்கள் குடிவரவு பிரஜாவுரிமைகள் அமைசசர் ஜேசன் கெனியினால் பகிரங்கப்படுத்தப்பட்டு வருவதாகவும் கடந்த மாத இதழின் இந்தப்பக்கக் கட்டுரையில் தெரிவித்திருந்தோம்.

இது தொடர்பாக வெளிவர ஆரம்பத்திருக்கும் முற்கூட்டிய தகவல்கள், அகதிகள் வருகையைக் கனடிய அரசு நிறுத்தப்போகும் நாட்கள் அண்மித்து வருவதைக் காட்டுவதாக இத்துறைசார் அமைப்புகளின் பிரமுகர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

பணபலத்துடனான பொருளாதார குடிவரவாளர்களை நோக்கி கனடிய குடிவரவு அமைச்சின் பார்வை திரும்பியுள்ளது. கனடிய டாலர்களுக்கு நிகரான பண மதிப்பையுடைய நாடுகளின் குடிவரவாளர்களை இலக்கு வைத்து விதிகள் மாறறப்படுகின்றன என்று இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆட்கடத்தலைத் தடுக்கவென சி-31 என்ற சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வகைதொகையாக (குழுக்களாக அல்லது கூட்டமாக) கனடாவுக்குள் வருபவர்களால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சம் தரும் இடையூறு ஏற்படுவதைதத் தடுக்கவே இந்தப் புதிய சட்டமென அமைச்சர் ஜேசன் கெனி தெரிவித்துள்ளார்.

இப்புதிய சட்டம், பணத்துக்காக ஆட்களைக் கடத்தி வருபவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவே கொண்டுவரப்படுவதாக முன்னர் அரசாங்க தரப்பால் கூறப்பட்டது. மாறாக, குழுக்களாக வந்து கனடாவில் அகதி அந்தஸ்து கோருபவர்ளையே இது நேரடியாகக் குறிவைத்துள்ளதென்பது இப்போது தெரியவந்துள்ளது.

புதிய சட்டம் அமுலுக்கு வரும் பட்சத்தில், கனடா வந்து அகதி அந்தஸ்துக் கோருபவர்களில் பலரும் குறிப்பிட்ட நாட்களை அல்லது மாதக் கணக்கில் சிறையில் கழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஆட்கடத்தல் மூலம் வந்தவர்களாக அல்லது குழுக்களாக வந்தவர்களின் அகதி மனுக்கள் பரிசீலிக்கப்படாமலும் போகலாம்.

அதுமட்டுமன்றி, இவ்வாறு வருபவர்களை விசாரிக்கும் அதிகாரம் Public Safety Minister எனப்படும் பொதுப் பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்கப்படுகின்றது. சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னர் இங்கு வந்து அகதி மனு சமர்ப்பித்த அகதிகளும் இந்த நடைமுறைக்குள் உட்படுத்தப்படுவரெனவும் தெரிகின்றது.

இது சம்பந்தமாக அண்மையில் கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜேசன் கெனி, தாமாகத் தங்கள் முயற்சியால் கனடா வந்து அகதியுரிமை கோருபவர்கள், தற்போதைய நடைமுறையின்படியே விசாரிக்கப்படுவர். இதில் எந்த மாற்றமும் இருக்காது என்று உறுதிபடக் கூறியுள்ளார்.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் இரண்டு கப்பல்களில் இலங்கைத் தமிழர் வன்கூவர் வந்து இறங்கியதைத் தொடர்ந்தே இவ்வகையான புதிய சட்டம் கொண்டு வரப்படுவது குறிப்பிடத்தக்கது.



எஸ்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

றொறன்றோ நகர மேயருக்கு எதிராகத் தனியார் ஒருவரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு செப்டம்பர் மாதத்தில் றொறன்றோ நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. 'விருப்பம் கலந்த முரண்பாடு' (Conflict of Interest) விதிகளுக்கமைய வழக்குத் தாக்கலானது. றொப் போர்ட்டுடன் சம்பந்தப்பட்ட உதைபந்தாட்டக் கழகமொன்றுக்கு பொதுநிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்றது தொடர்பான இவ்வழக்கு வெற்றிபெறின், மேயரைப் பதவி துறக்க நீதிமன்று உத்தரவிடலாம்.

'கற்றறாக்ட்' கண்சத்திர சிகிச்சை செய்யும் சில வைத்திய நிபுணர்கள் அளவுக்கதிகமான கட்டணத்தை மேலதிகமாக நோயாளர்களிடமிருந்து பெறுவதாக றொறன்றோ சென். மைக்கல் வைத்தியசாலை நடத்திய ஆய்வொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'ஓஹிப்' திட்டத்தில் அடங்காத வைத்திய சிகிச்சைகளுக்காகவே இவ்வாறு பணம் பெறப்படுகின்றதாம். கனடிய வைத்திய சட்டம் இதற்கு இடமளிக்கிறதாயினும், மேலதிகமான தொகையைச் சில கண் சத்திரசிகிச்சை நிபுணர்கள் பெறுவது அதிர்ச்சியை வழங்கியுள்ளது.

இங்குள்ள மாகாண அரசாங்கங்களின் சிபார்சில் விசா பெற்றுக் கனடாவில் குடியேற விரும்புபவர்கள், கனடிய அரச கரும மொழிகளில் அறிவு பெற்றிருக்க வேண்டுமென்ற விதி, அடுத்த மாதம் (ஜுலை) முதலாம் திகதி நடைமுறைக்கு வருகின்றது. ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழிகளில் ஆற்றலில்லாத புதியவர்கள், இங்கு தமது புதிய வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியாத நிலையிலிருப்பதை அவதானித்து இந்த மாற்றம் ஏற்படுத்தப்படுவதாக குடிவரவு அமைச்சர் ஜேசன் கெனி அறிவித்துள்ளார்.

'ரெலி மார்க்கட்டிங்' எனப்படும் வர்த்தக நேரக்கிலான தொலைபேசி அழைப்புகளை, விரும்பாதவர்களுக்கு மேற்கொள்ளக்கூடாதென்ற சட்டத்தை மீறி அந்த இலக்கங்களுக்குத் தொடர்புகளை மேற்கொண்ட 85 நிறுவனங்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையில், பதினொரு நிறுவனங்களுக்கு மொத்தம் 41,000 டாலர் தண்டம் விதிக்கப்பட்டது. இதுதவிர, வேறு 74 நிறுவனங்களை நீதிமன்றம் எச்சரிக்கை செய்தது. கடந்த நான்காண்டுகளில் மொத்தம் 2.1 மில்லியன் டாலர் இவ்வழியால் தண்டமாகப் பெறப்பட்டது.

கனடிய மத்திய அரசின் சேவையிலுள்ள பத்தொன்பதாயிரம் ஊழியர்கள் வேலையிழக்கவுள்ளனர். கனடிய பாதுகாப்புத்துறை, கனடிய திரைப்பட வாரியம், கனடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (சி.பி.சி) ஆகியவைகளில் கடமையாற்றுபவர்கள் இதில் கூடுதலாக அடங்குகின்றனர். அடுத்த மூன்றாண்டுகளில் 5.2 பில்லியன் டாலர்கள் செலவுக் குறைப்பை ஏற்படுத்த மத்திய நிதியமைச்சர் பிளகர்ட்டி எடுக்கும் நடவடிக்கையின் முதலாண்டுச் செயற்பாடாக இது அமைகின்றது.

கடந்த வருடம் நடைபெற்ற கனடிய பொதுத் தேர்தலில் ஆளும் கன்சர்வேடிவ் கட்சி வெற்றி பெற்ற ஏழு தொகுதிகளின் முடிவுகளை ரத்துச் செய்யுமாறு வழக்குத் தாக்கலாகியுள்ளது. தன்னியக்கத் தொலைபேசி ஊடாக இத்தொகுதி வாக்காளர்களுக்கு வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பாக தவறான தகவல் வழங்கப்பட்டதைக் காரணம் காட்டி இந்தச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கனடிய அக்கறையுள்ள பொதுமக்கள் அமைப்பு இந்த வழக்குக்கு ஆதரவு வழங்கியுள்ளது.

ஒன்ராறியோவிலுள்ள விபசார விடுதிகளைத் தடைசெய்வதற்கான சட்டம், அரசியல் அமைப்புக்கு முரணானதென மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது. இந்தச் சட்டம் அமுலுக்கு வருமானால், இத்தொழிலைப் புரிபவர்கள் வெளியிடங்களிலும் பொது இடங்களிலும் அதனைப் புரிய நேருமென்றும், இதனால் சமூகச் சீர்கேடுகள் இடம்பெறுமென்றும் ஒன்ராறியோ மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது நூற்றிமுப்பத்திரண்டு பக்கத் தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளது.

## ஒன்ராறியோ பட்ஜட்: என். டி. பி. வாக்களிப்பில் கலந்து கொள்ளாததால் நிறைவேறியது


ஒன்ராறியோ மாகாண அரசாங்கத்தின் புதிய வரவு செலவுத் திட்டம் (பட்ஜட்) கடந்த மாதம் 24ஆம் திகதி ஒருவாறு நிறைவேறியதால், எதிர்பார்க்கப்பட்ட குட்டித் தேர்தல் தடுக்கப்பட்டது. முன்னரே அறிவிக்கப்பட்டவாறு கன்சர்வேடிவ்வின் 37 பேரும் எதிர்த்து வாக்களிக்க, லிபரலின் 52 பேரும் ஆதரித்து வாக்களித்தனர். என். டி. பியின் 17 உறுப்பினர்களும் வாக்களிப்பில் கலந்து கொள்ளாததால், 15 வாக்குகளால் நிறைவேறியது. வருடாந்தம் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட வருமானமுடையவர்களுக்கு மேலதிக இரண்டு வீத வரியை அடுத்த ஐந்தாண்டுகளுக்கு விதிக்க வேண்டுமென்றும், அப்பணத்தை வசதியற்றவர்களுக்கான நிதியுதவிக்குப் பயன்படுத்த வெண்டுமென்றும் என் டி. பி விடுத்த கோரிக்கையை நடைமுறைப் படுத்த முதலமைச்சர் டால்ரன் மக்கன்ரி இணைங்கியதால், என். டி. பி எதிர்த்து வாக்களிப்பதிலிருந்து விலகி, வாக்களி-ப்பில் கலந்து கொள்ளாது விட்டது.

## அகதிக் கோரிக்கையாளருக்கு பல்வேறு வைத்திய வசதிகள் ஜூனிலிருந்து நிறுத்தம்!

கனடாவில் அகதிநிலை கோரியிருப்பவர்களுக்கு டாக்டர்களினால் பரிந்துரைக்கப்படும் (prescription) மருந்துகள், பற்சிகிச்சை வசதி, கண் பரிசோதனைகள், மற்றும் கண்ணாடிகளை இலவசமாக வழங்கும் வசதி அடுத்த மாதத்திலிருந்து (ஜுன்) நிறுத்தப்படுகின்றது. புதிய அகதிகளில் முக்கால் பங்கினரின் கோரிக்கைகளும் இப்போது நிராகரிக்கப்படுகின்றது. "இவர்களுக்கு கனடிய மக்களின் வரியிறுப்புப் பணத்தை எதற்காகச் செலவு செய்ய வேண்டும்?" என்று கேள்வி எழுப்புகின்றார் கனடிய மத்திய குடிவரவு அமைச்சார் ஜேசன் கெனி. நிராகரிக்கப்படும் உண்மையற்ற அகதிக் கோரிக்கையாளர்களுக்கு இலவச வைத்திய வசதியை வழங்க வேண்டிய தேவையில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Nedumaran releases book on LTTE leader




The much anticipated 'Pirapaharan – Tamizhar Ezhuchchiyin Vadivam' (Pirapaharan - The Embodiment of Tamils' Struggle) written by veteran Tamil Nadu political activist Pazha Nedumaran was released in Chennai on Friday at PT Thiyagaraja Hall. Published by Tamizhk-kulam Pathippaalayam, this book, of 1223 pages and illustrated with 32 pages of photographs some of which are hitherto unpublished, contains handwritten letters of Mr. Pirapaharan and includes important personal conversations with the author, that throw light on the deep philosophy of the LTTE leader. Along with CPI stalwart Mahendran's book 'Veezhveanen'ru ninaiththaayoa', this book written by a long time supporter of the Eezham Tamils' struggle will join the series of must-read literature written by Tamil Nadu activists on the struggle for Tamil Eelam, for Tamils everywhere, Tamil literary circles in Chennai said.

Amidst a packed hall, the book release was attended by Vaiko, Kolathur Mani, Poet Kasi Anandan, CPI leader Nallakannu, Maniyarasan and others, along with the author.

Speaking at the meeting, Mr. Nedumaran hoped that 'Pirapaharan' would generate awareness among the Tamils living world over of the aspects of the struggle in the past, especially to youth.

Vaiko said that whether the Tamils will take up armed struggle again or not in the future will be decided by the world, and this book will be a guide towards it.

Nedumaran's book moves in a chronological fashion, covering important incidents, political developments in the island and India, military manoeuvres of the Tigers, an idea of their political outlook, during the over 30 years of armed struggle, and stopping before 2009, roughly around the period of Brig. Balraj's death. Providing important background information to the crucial periods of the 80's and the 90's when the Eezham Tamil struggle was at its greatest momentum, the author also provides insights into the functioning of Pirapaharan's LTTE.



Delving into the changes and continuities in India's foreign policy towards Sri Lanka and the Eezham Tamils, Nedumaran throws light on dynamics of Indian and Tamil Nadu politics that affected these. Details of what happened behind the scenes between the Indian government and the LTTE are discussed, from the initial 'friendly' period to the point when India did a complete U-turn.

Likewise, referring to books written by Indian bureaucrats involved in the island's affairs and army commanders who participated in the IPKF fiasco, the author both analyses India's policy shifts and provides evidence for his arguments.

The popular Eezham Tamil poet Kasi Anandan writes in his preface to 'Pirapaharan' that "Without being a mere eulogy to a leader, this book is a powerful piece of art that gives a solid shape to Pirapaharan's ideology and goals."

"'Pirapaharan – Tamizhar Ezhuchchiyin Vadivam" is available from Thamizhk-kulam-pathippaalayam, 8/140 Dippoline, C. Pallavaram, Chennai - 600043, Tamil Nadu, India, Phone: +91-44-2264-0451. The book is priced at £25:00. (Courtesy: Tamilnet)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# உங்கள் தோற்றம் திருப்தியளிக்க...

'இது மற்றப் பக்கத்தைவிடப் பெரிசாக இருக்கிறது' என்றாள் அவள். கலந்தாலோசனை முடிந்து வெளியேற எழுந்தபோதுதான் அப்படிச் சொன்னாள். காய்ச்சல், சளி இருமலுக்காக மருந்தெடுக்க வந்திருந்தாள் அந்தப் பள்ளி மாணவி. தனது வலது கையைச் சுட்டிக் காட்டுவது கண்ணில் பட்டபோது, அடுத்த நோயாளி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்.
"அப்படி இருப்பது இயற்கைதானே. அதிகம் உபயோகிக்கும் கை மற்றதைவிட சற்று மொத்தமாக இருக்கும்" என ஆறுதல் சொல்லி அனுப்பி வைத்துவிட்டு அடுத்தவர் பிரச்சனையில் மூழ்கினேன்.
"மூக்கு சற்று வளைவாக இருப்பதாக" அதே பெண் அடுத்தமுறை வந்து சொன்ன போது சற்று உசாரானேன். அவளது முகத்தில் சற்று வாட்டம் இருப்பதையும் அவதானிக்க முடிந்தது.
சற்று ஆறுதலாகப் பேசிய போது அவளுக்கு தனது தோற்றம் பற்றிய தற்குறை இருப்பதை உணர்ந்தேன்.

தனது உடற்தோற்றம், அழகு போன்றவை பற்றிய அக்கறை பெரும்பாலும் பதின்ம வயதினரிடையே ஏற்படுவது சகஜம். ஒரு பக்க மார்பு பெரிசாக எனப் பெண்களும் அல்லது ஒரு பக்க விதைப்பை பெரிசாக எனப் பையன்களும் கவலைப்பட்டுக் கொண்டு வருவது அதிகம். தான் உயரமாக அல்லது குள்ளமாக இருப்பதான உணர்வு, தனது நிறம் குறைவாக இருப்பதாக எண்ணல் இப்படிப் பல.

தமது சருமம் மிருதுவாக இல்லை, தனது குரல் கரகரக்கிறது. தனது பல் சற்று பழுப்பு நிறமாக இருக்கிறது. தலைமுடி கொட்டுகிறது. நகம் அசிங்கமாக இருக்கிறது. இவ்வாறெல்லாம் தமது உடல் பற்றிய மறையான சிந்தனைகள் ஏற்படலாம். இப்படியான எண்ணங்கள் உங்களுக்கும் ஏற்பட்டால் அது பற்றி கவலைப்படவோ வெட்கப்படவோ வேண்டாம். நீங்கள் மட்டுமல்ல நிறையப்பேருக்கு இத்தகைய சிந்தனைகள் வருவதுண்டு.

மனத்தாக்கம் ஏற்படலாம்
தனது உடல் பற்றிய எண்ணங்களுக்கும் சுயமதிப்பீடுகளுக்கும் நிறையத் தொடர்பிருக்கிறது. தனது உடல் அழகாக இல்லை, அசிங்கமாக இருக்கிறது என எண்ணுபவருக்கு தன்னைப்பற்றிய தாழ்வுணர்ச்சி ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகம் எனலாம். தாழ்வு மனப்பான்மை என்பதும் இதனோடு தொடர்புடையதே. முதலில் குறிப்பிட்ட பெண்ணுக்கு தனது உடற்தோற்றம் பற்றிய திருப்தியின்மையானது மனச்சோர்வாக மாறியிருந்தது. அதேபோல ஒவ்வொருவரும் தமது தோற்றம் பற்றிய தாழ்வுமனப்பான்மை உளம் சார்ந்த நோய்களாக மாறாது தடுப்பது அவசியம். அதற்கான துடுப்பு அவரவர் கைகளிலேயே இருக்கிறது.

நீங்கள் செய்ய வேண்டியது என்ன?
அப்படியான மறைஎண்ணம் வந்தால் நீங்கள் செய்யக் கூடியது என்ன? உங்களிடம் உள்ள தனிச்சிறப்புகளைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பியுங்கள். நிறம் கறுப்பாக இருந்தாலும் உங்கள் கண்கள் கவர்ச்சியுடையனவாக இருக்கலாம்.

சிரிக்கும்போது ஏதோ ஒரு மோகனம் மற்றவர்களை ஈர்க்கலாம். அல்லது உங்கள் உரையாடல் திறன் மற்றவர்கள் உங்களோடு மனம் திறந்து பேச வைக்கலாம்.

விளையாட்டு, சமையல், கையெழுத்து இப்படி ஏதாவது ஒரு சிறப்பு அல்லது பல சிறப்புகள் உங்களிடத்தில் மறைந்து கிடக்கலாம். அவற்றைக் கண்டு பிடியுங்கள். கண்டு பிடித்ததை மெருகூட்டுங்கள். மனம் மகிழ்ச்சியில் ஆளும்.

சிறப்புகளை மீள நினைத்தல் நன்று
உங்கள் சிறப்புகளை நினைத்துப் பார்ப்பதுடன் நின்றுவிடாது அவை பற்றி குறிப்புகள் எழுதி வைப்பது இன்னும் மேலானது. எழுதத் தவறி-விட்டாலும், தினமும் உங்களை மகிழ்வுறச் செய்த சம்பவங்களை படுக்கைக்கு சென்று தூங்கு முன்னர் இரை மீட்டிப் பார்ப்பதுவும் சுயபிம்பத்தை உயர்த்தக் கூடியதாகும். தினமும் குறைந்தது மூன்று மகிழ்வூட்டிய நிகழ்வுகளையாவது நினைவுபடுத்துங்கள்.

உதாரணத்திற்கு நீங்கள் கூறிய விடைக்கு ஆசிரியர் திருப்தி எனச் சொல்லியிருக்கலாம். நீங்கள் தெரிந்திருந்தும், விடையளிக்க முன் வேறொருவர் சொல்லிப் பாராட்டைப் பெற்றிருந்தாலும் விடை தெரிந்ததை உங்களுக்குக் கிடைத்த வெகுமதியாக எண்ணி மகிழுங்கள். "அட நான் சொல்லாமல் விட்டுவிட்டேனே" எனக் கவலைப்படுவது கூடவே கூடாது. உங்களது உடை, அல்லது நீங்கள் தயாரித்த உணவு, அல்லது நீங்கள் சொன்ன ஜோக் மற்றவர்களைக் கவர்ந்திருக்கும்.

உங்கள் வெற்றிகளை நினைவுபடுத்துங்கள். அவற்றை உங்களுக்குக் கேட்குமாறு வாய்விட்டு உரத்துச் சொல்லுங்கள். அல்லது உங்கள் பெற்றோர், அண்ணன், அக்கா அல்லது உங்களைப் புரிந்து கொண்ட ஒருவருடன் பகிர்ந்து மகிழுங்கள்.

இவை யாவுமே உங்களைப் பற்றிய உங்கள் சுயபிம்பத்தை உயர்த்த உதவும். உங்களுக்குள் ஏதோ ஒரு அழகு ஒழிந்திருக்கிறது. உங்களின் மனது மற்றவர்களைக் கவருகிறது. உங்களுக்கு மட்டுமே தனித்துவமான ஏதோ ஒரு ஆற்றல் அழகு குணம் குடிகொண்டிருக்கிறது. அதை நினையுங்கள். அதையிட்டுப் பெருமைப்படுங்கள். மேலும் வளருங்கள். ஒளிமயமான எதிர்காலம் உங்கள் வரவிற்காகக் காத்திருக்கிறது. பயன்படுத்தாது தப்ப விட்டுவிடாதீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# BOYD - Bring Your Own Device
# உங்கள் கருவிகளைக் கொண்டு வரவும்

அண்மையில் பீல் கல்விச்சபை ஒரு புரட்சிகரமான அறிவித்தலை தனது 234 பாடசாலைகளைச் சார்ந்த 153,000 மாணவர்களுக்கு வழங்கியுள்ளது. அதாவது Bring Your Own Device என்பதாகும். உங்கள் கற்றல் கருவிகயை நீங்களே வகுப்புகளுக்குக் கொண்டு வரவும் என்பதாகும். அதாவது மாணவர்கள் smart phones, ipads, tablets, laptops என்பனவற்றை வகுப்புகளுக்குக் கொண்டு வரும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஒரு காலகட்டத்தில் மாணவர்கள் வகுப்புகளுக்கு செல்லிடத் தொலைபேசிகளை கொண்டுவரக் கூடாதென தடைசெய்யப்பட்டனர். செல்போன் சத்தம் பாடசாலைக்குள் கேட்காதபடி தொழில்நுட்ப வசதிகளைக் கூட ஏற்படுத்தினார்கள் (To curb intrusion of ring tones). ஆனால் இன்றோ நிலைமை முற்றிலும் மாறி வகுப்புக்கு தொழில்நுட்பக் கருவிகளை கொண்டு வரும்படி கேட்டுள்ளனர். இதனை 21ஆம் நூற்றாண்டு கல்வி கற்கும் முறை என அழைக்கின்றனர்.

இன்றைய மாணவர்கள் கர்ணன் கவச குண்டலத்தோடு பிறந்தமாதிரி ஏதோ ஒரு கணினியை அடக்கிய கருவியை தம்முடன் கொண்டு செல்வதை காணக்கூடியதாக உள்ளது. வீதியில் நடக்கும் பொழுதோ, ஏன் இனபந்துக்களின் வீடுகளுக்குச் செல்லும் பொழுதோ இவையும் இவர்களுடன் கூடவே பயணம் செய்கின்றன. பிள்ளைகளோடு நாங்கள் கதைப்பது கூட அவர்களின் புலனில் பதி-வதில்லை. எந்த நேரமும் ஏதோ ஒரு நிரலை இக்கருவிகளில் விரலால் தட்டியபடியும், பார்த்தபடியும், கேட்டபடியும் தான் இருக்கிறார்கள்.

பாடசாலைகளில் எல்லாம் கடந்த இரண்டு சகாப்தங்களாக கணினி மையங்கள் மும்முரமாக அமைக்கப்பட்டன (Computer labs). மாணவர்கள் ஒரு நாளைக்கு ஒன்றோ, இரண்டோ மணித்தியாலங்கள் மாத்திரமே இம் மையங்களுக்குச் சென்று கல்வி கற்றனர். அந்தக் காலம் மலை ஏறிப் போய்விட்டது. இன்று அவர்களோடு பயணம் செய்யக்கூடிய ஒரு தொழில் திறனை (Portable technology) பாடசாலைகள் வழங்கும் காலம் வந்துவிட்டது என Peel District Board Director Brian Woodland கூறுகிறார். அது மாத்திரமன்றி கற்றல் என்பது வகுப்பு அறைக்கு அப்பால் செல்ல வேண்டிய காலம் வந்துவிட்டது. கல்விச் சபைகளால் இற்றைக் காலத்துக்கு ஏற்ற அதி தொழில்நுட்பம் கொண்ட கணினிகளை வாங்குவதற்கு பணவசதியும் இல்லை.

ஒன்ராறியோ அரசாங்கம் தொழில்நுட்பம் சம்பந்தமான தனது நிதி ஒதுக்கீட்டை நிரந்தரமாகக் குறைத்துவிட்டது. ஆகவே கல்விச் சபைகள் இன்றைய தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தமது கற்றல் முறைகளையும் மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

இன்றைய ஆசிரியர் சமூகம் மாணவர்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் தொழில்நுட்பத்தில் முன்னேற முடியாமல் திணறுகிறார்கள். முன்னைய கற்றல் முறைகள் மாணவர்களுக்குத் திருப்தி அளிப்பதாக இல்லை. ஆகவே மாணவர்களைக் கவரும் முறையில் ஆசிரியர்கள் தங்கள் வகுப்புகளை நடத்தாவிட்டால் அது வீண் பொழுதாகவே அமையப் போகிறது. வகுப்பு அறையில் மாணவர்கள் ஒவ்வொரு நிமிடமும் கற்பித்தலோடு ஒன்றிணைந்து செயல்படாவிட்டால் முன்னேற்றமும் ஏற்படாது, ஒழுங்கையும் நிலைநாட்ட முடியாது. பாடநிரல்கள் தொழில்நுட்பம் கூடியதாக மாணவர்களைக் கவரும் வகையில் அமையாத பொழுது சலிப்பும், சகிப்புத் தன்மை இன்மையுமே ஏற்பட இடமுண்டு.

பீல் கல்விச் சபை 7 மில்லியன் டாலர் தொகையை சில நாட்களுக்கு முன்பு தொழில்நுட்ப முன்னேற்றத்திற்காக (Band width in schools) ஒதுக்கியது. முன்பெல்லாம் இவ்வாறு நிதி ஒதுக்கும் பொழுது மேலும், மேலும் கணினிகளை வாங்கிக் குவிப்பதிலேயே கவனம் செலுத்தப்பட்டது. ஆனால் இன்றோ ஒவ்வொரு மாணவனும் தனது கையிலேயே இக் கருவிகளைக் கொண்டு வருகிறார்கள். அவற்றை வகுப்பு அறைகளில் உபயோகிக்கும் பொழுது அதற்குரிய சக்தியை பாடசாலை வழங்கினாலே போதுமானதாக உள்ளது. இவ்வாறு மாணவர்களை ஊக்குவிக்கும் பொழுது முக்கியமான ஒரு கேள்வி எழுகிறது - எல்லா மாணவர்களாலும் இவ்வாறு தொழில்நுட்பம் கூடிய கருவிகளைக் கொண்டு வர முடியுமா? என்பதாகும்.

வருமானம் குறைந்த குடும்பப் பிள்ளைகளால் சமமின்மை (Equity) ஏற்படத்தான் போகிறது. இதனை App Gap (கணினி இடைவெளி) என கூறுகிறார்கள். அதற்கும் பாடசாலைக் கல்விச் சபை விடையை வைத்திருக்கிறது. பீல் கல்விச் சபை மாணவர்களுக்கு இக் கருவிகளை பாடசாலை மூலம் பாவிப்பதற்கான வசதிகளை வழங்கவுள்ளனர். (Access through classroom computers, and tablets in schools). பல கணினி நிறுவனங்கள் குறைந்த வாடகையில் (low cost rentals, rent to own plans) அல்லது வாடகை மூலம் சொந்தமாக்கிக் கொள்ளக் கூடிய வகையில் பல வசதிகளைக் கல்விச் சபையே ஒழுங்கு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது. பாடசாலைகள் இவ்வாறு வியாபார நிறுவனங்களுக்கு உதவி செய்வதை குறை கூற முடியாது. ஏனெனில் மாணவர்களின் நலனை அடிப்படையாகக் கொண்டே இத்தகைய வியாபார ரீதியான செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக Woodland கூறுகிறார்.

ரொறன்ரோ கல்விச் சபையும், யோர்க் கல்விச் சபையும் ஏற்கனவே ஆசிரியர்கள் விரும்புமிடத்து இத்தகைய கருவிகளை வகுப்புக்குக் கொண்டு வர அனுமதி வழங்கியுள்ளனர் (Teachers discretion). பீல் கல்விச் சபை ஆசிரியர்களுக்கு தொழில்நுட்பத்தில் பாண்டித்தியம் அடைய தேவையான பயிற்சிகளையும் வழங்க உள்ளனர். "மாணவர்கள் கல்வி கற்கும் முறைகளுக்கு எதிர்ப்பு காட்டுவதிலும் பார்க்க அவர்களுக்கு லாவகமாக கல்வி கற்கும் முறை மூலம் கல்வி வழங்குவதே இத் தலைமுறைக்கு நன்மையளிக்கும். அதனாலேயே இத்தகைய ஒரு எதிர்கால நோக்குடன் திட்டத்தை (Ambitious plan) பீல் கல்விச் சபை அமுல்படுத்தவுள்ளது" இவ்வாறு Catherine Fife president of the Ontario Public School Board's Association கூறுகிறார்.

Ontario Institute of studies in Education ஐ சார்ந்த Professor Jeff Kugler "தொழில்நுட்பமும் கற்றலுக்குத் தேவைப்படுமானால் எல்லா மாணவர்களும் அதனைப் பெற்றுக் கொள்ளும் வசதியை கல்விச் சபைகள் வழங்கினால்தான் மாணவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாது" எனக் கூறுகிறார்.

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

21

தினசரி வாழ்வில் நாம் பாவிக்கும் அதிகமான சொல்லாட்சி 'மனம்' பற்றியதாகவே இருக்கும். மனமே எல்லாவற்றுக்கும் ஆதாரம் என்பதால் எடுத்ததெற்கெல்லாம் அந்த சொல்லே முன்வந்து நிற்கும். பொதுவாக இரத்த அழுத்தம், நீரிழிவு நோய்களை அளவீடு செய்வதற்கு பல கருவிகள் உள்ளன. ஆனால் மனதினை அளப்பதற்கு எந்தக் கருவியும் இல்லை! எனவே தான் இந்த நூற்றாண்டில் அதிகமான ஆராய்ச்சிகள் மனம் பற்றியதாகவே இருக்கும் என்று உளவியலாளர் கூறுகின்றனர்.

காலநிலை அடிக்கடி மாறுவது போன்று மனம் அடிக்கடி மாறிக் கொண்டேயிருக்கும். மனதிலிருந்து பிறந்ததே மனநிலை (Mood) என்பதாகும். மனநிலை சரியாக இருந்தால் மட்டுமே எதனையும் செய்ய முடிகிறது. நல்ல மகிழ்ச்சியாக இருந்த ஒருவர் திடீரென்று கோபக்காரனாக மாறிவிடுகிறார். கோபத்துடன் இருந்த ஒருவர் திடீரென்று சிரிக்க சிரிக்க பேசுகின்றார். இதற்குக் காரணம் மனநிலை ஒழுங்கீனமே (Mood Disorder) என உளவியலில் கூறுகின்றனர். மனமே எல்லாவற்றுக்கும் அடிப்படையாக உள்ளதால் மனநிலை மாறுதல்கள் பற்றிய தெளிவு அவசியமாகிறது. விலங்கினங்களுக்கு கூட இம் மனநிலை வெளிப்படையாக தெரிய வருகின்றது. பறவைகள் பாடுகின்றன; விலங்கினங்கள துள்ளிக் குதிக்கின்றன. பேச முடியாது விட்டாலும் நல்ல மனநிலையை அவை அனுபவிக்கின்றன.

மனநிலை ஒழுங்கீனம் வயதுக்கு ஏற்ப மாறுதல் அடைவதே உண்மை நிலையாகும். சிறுவயது முதல் காலத்திறகு காலம் ஓய்வின்றி மனம் செயல்படுவதே எல்லா குழப்பங்களுக்கும் காரணமாகும். அது போன்று நாடு வளர்ச்சியடைவதற்கும் இதுவே காரணமாகும். சிலருக்கு இந்த மனமானது அதீதமாகச் செயற்பட்டு பித்து (Mania) பிடித்த நிலைக்கு சென்றுவிடுவர். பெருமளவு சிந்தனையாளர்கள், ஓவியர்கள், விளையாட்டு வீரர்கள் மத்தியில் இவ்வாறு தோன்றுவதுண்டு. இப்படியானவர்களே சாதனைகள் பல புரிந்துள்ளனர். மகாகவி பாரதி கூட மிகவும் அதி தீவிர பித்துப்பிடித்துள்ள நிலையில் பல அற்புதமான கவிதைகளை படைத்துள்ளதாக கருதுகின்றனர்.

வயது வந்தவர்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே ஏற்படும் உறவு விரிசல்களுக்கும் இம் மனமே காரணம். வாழ்நாள் முழுவதும் ஒன்றாக வாழ்கின்ற தம்பதிகளையும், ஒருநாள் கூட வாழ முடியாத தம்பதிகளையும் காண்கிறேன். அடிமனப் பிரச்சினைகள் தலைதூக்கும் வேளையில் இறுதியில் மிஞ்சுவது பழிவாங்கல் உணர்வாகும். மரபியல், உயிர் ரசாயான கூறுகள், மூளையின் அமைப்பு, நரம்பியல் கூறுகள், சமூக அமைப்பு எல்லாமே மனதினை வெகுவாக பாதிப்பனவாகும். இத்துடன் நம்பிக்கையீனம், சுயகுழப்பம், உளச்சீர்குலைவு, சந்தேகம், பயம், ஆளுமை, மறதி என்பனவும் மனதினை பாதிக்கின்றன. உடலுக்கு எவ்வித தாக்கங்கள் ஏற்பட்டாலும் மனதினை திடப்படுத்தி, ஒருமுனைப்படுத்தி வாழ்ந்த மகான்களையும் காண்கிறோம்.

சுவாமி விவேகானந்தர் தியானம் செய்யும்போது சிகரெட்டினால் சுட்டுக்கூட பார்த்தும் அவர் அதனை உணரவில்லை. உண்மையில் மனத்தின் ஒருமைப்பாடு எதனையும் வெல்லும் ஆற்றல் பெற்றது என்பதனையே இது காட்டுகின்றது.

மனதினை மகிழ்ச்சியால் நிரப்புவோம்.

மீண்டும் சந்திப்போம்.....

இக் கருவிகள் வகுப்பில் ஒழுங்கீனத்தை ஏற்படுத்தலாம் எனப் பலரும் கருதலாம். ஆனால் ஏற்கனவே மாணவர்கள் இவற்றை வகுப்புகளுக்குக் கொண்டு வந்து கற்கத் தொடங்கி விட்டார்கள். ஆகவே பாடசாலையின் அனுமதியுடனும், ஆசிரியரின் அனுசரணையுடனும் இவை வகுப்பில் பாவிக்கப்பட்டால் ஒழுங்கீனம் ஏற்பட மாட்டாது என கல்விச் சபை அபிப்பிராயப்படுகிறது.

How can kids stay focused with a bevy of distractions in front of them - எப்படி தங்கள் முன்னால் கவனத்தை திருப்பும் சாதனங்களோடு இருக்கும் பொழுது மாணவர்கள் கல்வி கற்க முடியும் எனப் பல பெற்றோரும் அச்சம் தெரிவித்துள்ளனர். ஆனால் பரீட்சார்த் தகரமாக இவை பல பாடசாலைகளில் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றியும் கிடைத்துள்ளது. HTS Independent school - Richmond Hill இல் மூன்றாம் வகுப்பு மாணவர்கள் ஒரு நகரத்தை (Sim city) தமது ipad இல் நிர்மாணிக்கும்படி பணிக்கப்பட்டபொழுது, அவர்கள் நகரத்தை அமைத்ததோடு மாத்திரமல்லாது, அங்கு ஏற்படக்கூடிய பல பிரச்சனைகளையும் தமது கணினிகளிலேயே உசாவி கண்டுபிடித்தனர். 8 வயதுப் பிள்ளைகளாலேயே சோலைவரி, கழிவு அகற்றல், மக்கள் இடப் பெயர்வு முதலிய கடினமான எண்ணக் கருக்களை ipad இன் உதவியுடன் கையாள முடியுமானால் உயர் வகுப்பு மாணவர்களுக்கு இது ஒரு சவாலாக அமையப் போவது இல்லை. அதற்கு மாறாக தரவுகளை உடனுக்குடன் பெறுவதும், தரவுகளை ஒரு சில நிமிடங்களில் வரை படங்களாக அமைப்பதும் மாணவர்களுக்கு புத்துணர்ச்சியையே (Excitement) அளிக்கப் போகிறது. ஆகவே இவர்களின் கவனம் சிதறலாம் எனப் பயப்படத் தேவையில்லை. வகுப்பில் ஒழுங்கீனத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற மனநிலையோடு வரும் மாணவர்கள் கற்றல் முறைகளை எப்படி மாற்றியமைத்தாலும் குழப்படி செய்யத்தான் போகிறார்கள்.

இனிவரும் காலங்களில் வேலைத் தளங்களிலும் வாழ்க்கையிலும் இக் கருவிகளை முறையாக (respectfully) கையாள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படப் போகிறது. அதற்குரிய பயிற்சியை பாடசாலைகள் வழங்குதல் இன்றியமையாதது. ஆகவே எதிர்வரும் கல்வியாண்டில் குறிப்பு புத்தகங்களுக்குப் (note books) பதிலாக கணினிக் கருவிகளை மாணவர்கள் தமது புத்தகப் பையில் (knapsack) சுமப்பது வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும்.●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# பச்சை விளக்கு

ஒரு நாள் இரவு இரண்டு மணிக்கு நான் தனியாக காரை ஓட்டிக்கொண்டு போனேன். ரொறன்ரோ நகரத்தின் ஆறு வீதிகளிலும் ஒரு கார் கிடையாது; பஸ் கிடையாது; பாதசாரி கிடையாது. முழு ரோட்டும் எனக்காகவே போட்டிருந்தது. ஒரு சந்தி வந்து அங்கே சிவப்பு விளக்கு எரிந்தது. குறுக்கே போன அகலமான சாலையும் நிசப்தமாக இருந்தது. கார், பாதசாரிகள் என ஒன்றுமே கிடையாது. சும்மா ஒரு நிமிட நேரம் விளக்கைப் பார்த்தபடி காரில் அமர்ந்திருந்தேன். பச்சை விளக்கு விழுந்ததும் காரை எடுத்தேன்.

அப்பொழுது நான் யோசித்தேன். சிக்னல் விளக்கை கண்டுபிடித்தது முதலில் லண்டனில்தான். இப்பொழுது, ஏறக்குறைய 140 வருடங்கள் கழிந்த பின்னரும் ரோட்டு விளக்குகளில் பெரிய மாற்றம் ஒன்றுமில்லை. விஞ்ஞானம் எத்தனை தூரம் வளர்ந்துவிட்டது. சந்திரனில் கால்வைத்த பிறகு இன்று விண்கலம் செவ்வாயை தாண்டி வியாழனைத் தாண்டி சனிக்கிரகம் வரைக்கும்போய் ஆராய்ச்சி செய்கின்றது. ஒரு விமானம் பறந்துகொண்டிருக்க இன்னொரு விமானம் பறந்தபடி ஆகாயத்திலேயே அதற்கு எரிபொருள் நிரப்புகிறது. ஹபிள் தூரக்கண்ணாடி 350 மைல் உயரத்தில் 96 நிமிடத்துக்கு ஒருமுறை பூமியை சுற்றிக்கொண்டு கிரகங்களையும் விண்வெளி அதிசயங்களையும் ஓயாமல் படம் பிடித்துக்கொண்டிருக்கிறது. இத்தனை முன்னேற்றம் இருந்தும் சிக்னல் விளக்குகளில் வாகனங்கள் சும்மா நின்றுகொண்டிருப்பதை நிறுத்த முடியவில்லை.

சாலை விளக்குகளில் மந்திரக் கண்களை பொருத்திவிட்டாலே போதுமானது. எத்தனை வாகனங்கள் எந்த திசையில் என்ன வேகத்துடன் எவ்வளவு தூரத்தில் வருகின்றன என்பது சிக்னல் விளக்கு கணினியில் பதிவானால் விளக்குகள் அதற்கேற்ற மாதிரி செயலாற்ற முடியும். என்னுடைய கார் 100 அடி தூரத்தில் வரும்போதே ரோட்டில் வேறு வாகனங்கள் இல்லாத காரணத்தினால் பச்சை விழுந்திருக்க வேண்டும். ஆனால் விழவில்லை. இத்தனை பெரிய விஞ்ஞான வளர்ச்சி இருந்தும் இந்த சின்ன விசயம் இன்னும் கவனிக்கப்படாதது ஆச்சரியம்தான்.

இன்னும் பெரிய ஆச்சரியம் என் நண்பர் சொன்னது. அவர் கனடாவில் புகழ்பெற்ற வழக்கறிஞர். அவருக்கு ஒரு விநோதமான வழக்கு வந்தது. அவருடைய வழக்கில் வாய்பேசமுடியாத ஒருத்தர் சாட்சி சொல்லவேண்டும். சைகை மொழி தெரிந்த ஒருத்தரை மொழிபெயர்ப்பாளராக நியமித்தார்கள். நண்பர் கேள்வி கேட்க அதைச் சைகைக்காரர் சைகையில் சொன்னார். ஆனால் சாட்சி ஒன்றும் புரியாமல் திருதிருவென்று விழித்தார். பின்னர் தெரிய வந்தது என்னவென்றால் சாட்சிக்கு பிரிட்டிஷ் சைகை மொழிதான் தெரியும், அமெரிக்க சைகை மொழி தெரியாது. வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. அவர்கள் இப்பொழுது பிரிட்டிஷ் சைகை மொழி விற்பன்னர் ஒருவரை தேடுகிறார்கள். வழக்கறிஞர் நண்பருக்கு இரண்டு சைகை மொழிகள் இருப்பது அன்றைக்குத்தான் தெரிந்தது. 'இந்த அதிசயத்தை என்னென்பது. இருவருமே சைகை மொழி தெரிந்தவர்கள் ஆனாலும் அவர்கள் ஒருவரோடு ஒருவர் உரையாட முடியாது. இதுதானா உலகம் முன்னேறியிருக்கிறது என்பதற்கு அடையாளம்?' வழக்கறிஞருக்கு ஒரே வியப்பு.

கண்பார்வையற்ற நண்பர் ஒருவர் வங்கியில் வேலை செய்கிறார். அவருடைய கம்பியூட்டர் எழுத்தை குரலாக மாற்றும் திறனுள்ளது ஆகையால் அவருக்கு ஒருவித பிரச்சினையும் இல்லை. அவர் பிரெயில் மொழியை ஆங்கிலத்திலும் தமிழிலும் படித்தவர். அதில் தட்டச்சு செய்யவும் வாசிக்கவும் செய்வார். புள்ளிகளை 63 வடிவங்களில் அமைப்பதுதான் பிரெயில். ஆங்கிலத்திலும் தமிழிலும் இன்னும் உலகத்து வேறு மொழிகளிலும் அதே 63 வடிவங்கள்தான். தமிழில் பிரெய்லில் எழுதினால் அதை ஆங்கிலேயர் ஒருவர் தடவி படித்துக்கொள்ளலாம், ஆனால் பொருள் புரியாது. அவருக்கு தமிழும் தெரியவேண்டும்.

உலகத்திலே 40 மில்லியன் பார்வையற்றவர்கள் வாழ்கிறார்கள். எல்லோரும் இதே புள்ளி வடிவங்களைத்தான் பயன்படுத்துகிறார்கள். ஆனாலும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முடியாது. அவர்களுக்கு ஒரு பொது மொழி இருந்தால் உலகத்தின் எந்த மூலையிலிருந்தும் ஒரு பார்வையில்லாதவர் இன்னொருவரோடு பிரெயில் மூலம் கருத்து பரிமாறிக்கொள்ளலாம். என் நண்பருக்கு இது பற்றிய ஆதங்கம் உண்டு ஆனால் ஒருவருமே சிந்தித்ததாகத் தெரியவில்லை.

1991 ம் வருடம் இத்தாலியின் அல்ப்ஸ் மலை பிரதேசத்தின் எல்லையில் 5300 வருடங்களாக பனியில் உறைந்து கிடந்த ஒரு மனித உடலை மலை ஏறிகள் கண்டு பிடித்தது ஞாபகத்துக்கு வரலாம். ஐரோப்பாவில் கிடைத்த ஆகப் பழமையான சடலம் இதுதான். இந்த பனிமனிதனுக்கு விஞ்ஞானிகள் ஒட்ஸி என்று பெயர் சூட்டினார்கள். கடந்த 20 வருட ஆராய்ச்சியின் பின்னர் சமீபத்தில் National Geographic இதழ் இந்த மனிதனைப்பற்றிய மர்மத்தை விடுவித்திருக்கிறது. அவனுடைய இடது தோளில் முக்கியமான ரத்த நாளம் ஒன்று கல்முனை அம்பினால் துண்டாக்கப்பட்டிருக்கிறது. அம்பு எய்து யாரோ அவனைக் கொலை செய்திருக்கிறார்கள். 5300 வருடங்களுக்கு முன்னர் நடந்த கொலை இப்போது துலக்கப்பட்டிருக்கிறது. இப்படித்தான் விஞ்ஞானம் முன்னால் முன்னால் வளர அந்த அறிவை பின்னால் பின்னால் தள்ளிச் சென்று ஆராய முடிகிறது. ஆராய்ச்சி இத்துடன் முடியப் போவதில்லை. அது தொடர்ந்துகொண்டே இருக்கும்.

விஞ்ஞானம் ஒருவருக்காகவும் நிற்பதில்லை. அது தன்பாட்டுக்கு வளர்ந்து கொண்டே போகும். புதுப்புது கண்டுபிடிப்புகளும் புது விளக்கங்களும் கிடைக்கும். ஆனால் எப்பவும் பச்சை விளக்கு எரியும் என்று சொல்வதற்கில்லை. இடைக்கிடை சிவப்பும் விழும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*



# அம் மாதினம்

இம் மாதத்தில் வருவது அம் மாதினம்.

அது உயிர் கொடுத்தவருக்குரிய தினம். அது உதிரம் கொடுத்தவருக்குரிய தினம். அது எமக்காக உருகியவரின் தினம். அது எம்மை உருக வைத்தவரின் தினம். வாழ்ந்த பொழுதும் எம்முள் வாழ்ந்து மறைந்த பின்னும் எம்முள் வாழ்பவர் தினம்.

அகிலமெங்கும் நினைவிலே வந்து போகும் சகல தெய்வங்களுக்கும் நிகரானதாய் இதயங்களை விட்டு அகலாதவர் தினம்.

தினம் தினமும் சிறப்பிற்கும் அம்மாவை சிரிப்பினில் கூட சிக்கனமின்றிச் சிறப்பிக்க வேண்டிய தினம் - அம் மாதினம்'

அம்மா தினத்தை பிரசவித்த பெருமை அமெரிக்காவின் மேற்கு வேர்ஜினியாவில் அன்னா ஜார்விஸ் என்பவருக்குரியது.

1912 ம் ஆண்டு முதல் அம்மா தினம் உலகமெங்கும் பல்வேறு நாடுகளில் பல்வேறு தினங்களில் தாலாட்டப்படுகின்றது. எனினும் மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமையை 1948 ம் ஆண்டு தொடக்கமே உத்தியோக பூர்வமாக கனடாவும் வட அமெரிக்காவும் அம்மா தினமாகத் தவழ விட்டு மகிழ்கின்றன. குடும்பங்களையும் உறவுகளையும் சூழலையும் அரவணைக்கும் அம்மாதினம் இம்முறை 13.05.2012ல் கனடாவில் கொஞ்சிக் குலவும். கூடவே இவ்வருடத்தை அம்மாதினத்தின் 100 வதுபிறந்தநாளாக பூமிக்குழந்தைகள் பாலுட்ட முனைகின்றன.

பண்டைய கிரேக்கத்தில் லாம்பர்ட்ஸ் என்னும் பெயருடன் திகழ்ந்த அன்னையர் வழிபாடு பின்னர் ஆசியா மைனரில் சம இரவு நாளாகப் பரந்து ஈற்றில் ஐரோப்பா எங்கும் தாய்ஞாயிறாக வியாபித்ததே அன்னையர் தினத்தின் வரலாற்றுப் பின்புலம்.

பூஞ்சாடிகள், தேயிலை, வாசனையுள்ள சவர்க்காரம், வாசனையூட்டப்பட்ட மெழுகுவர்த்தி, பெயரும் படமும் பொறிக்கப்பட்ட குவளைகள், பிறந்த நாட்டிற்கான பயண சீட்டு இவற்றில் ஏதாவதொன்றுடன் தமிழர் அல்லாத ஒருவர் அம்மாதினத்தில் காணப்பட்டால் அவர் முதியோர் இல்லத்திற்கு சென்று தன் அன்னையிடம் காதலில் கசியவுள்ளார் என்று அர்த்தம்.

Coffee Maker, Micro wave, Toaster,Blender, Juicer, Mixer, Grinder, Jewellery, Saree, Dressing gown, Tamils Radio, Tamil Video, Tamil books

இவற்றில் ஏதாவதொன்றுடன் அம்மாதினத்தில் தமிழர் ஒருவர் காணப்பட்டால் அவர் தனது இல்லத்திற்குச் சென்று, அன்னையின் மடியில் ஓர் அழகு எனத் தன் தலை சாய்க்கவுள்ளார் என்று அர்த்தம்.

உயரமான தாய், குள்ளமான தாய், பருமனான தாய், ஆண் தாய், வாடகை தாய், அதிக பிள்ளைகளப் பெற்ற தாய், அதிக இடைவெளியில் பிள்ளைகள் பெற்ற தாய், 13 வருடங்களில் 12 பிள்ளைகள் பெற்ற தாய், மலை முகட்டில் பெற்ற தாய், ஆழ் கடலின் ஆழத்தில் பெற்ற தாய், 7 கண்டங்களிலும் ஒவ்வொரு பிள்ளை பெற்ற தாய், சகல சமுத்திரங்களிலும் பிரசவித்த தாய் என சொல்லுக்குள்ளே சுகம் வைக்கின்றன அம் மாதினத்தை குறிக்கும் பதிவேடுகள்.

1940 ம் ஆண்டு பெரு நாட்டில் தனது ஐந்து வயதில் பிள்ளையை பெற்றெடுத்த லீனா மெடினா என்பவரே உலகின் ஆகக் குறைந்த வயதுடைய தாய். 2009 ம் ஆண்டு இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் தனது எழுபத்தியிரண்டாவது வயதில் பிரசவித்த ரஜோ தேவி லோகன் உலகின் ஆகக் கூடிய வயதில் பிரசவித்த தாய். 2010 ம் ஆண்டு அமெரிக்காவில் ஒரே முறையில் எட்டுப்பிள்ளைகளை பெற்றவர் நடியா டென்ஸி. 23 வயதில் பேத்தியானவர் ரூமானியாவை சேர்ந்த றிவ்கோ ஸ்ரான்னஸ்கு. தனது 12 வயதில் மகள் மரியாவை பெற்றார். அந்த மகள் மரியா தனது 11 வயதில் தானும் பெற்றார்.

அரவணைக்கும் அம்மா (அம்ருதானந்தமயி), மேல்மருவத்தூர் அம்மா (பங்காரு அடிகள்), அம்மாபகவான் (விஜய குமார்-பத்மாவதி), தமிழகஅரசியலம்மா (ஜெயலலிதா) என கோடிக்கணக்கான அம்மாமார் பக்தகோடிகள் இறக்கும் வரை இருப்பர்.

உலகில் ஆதார அடிப்படை சுகாதார வசதிகள் இன்றித் தவிக்கும் மகளிரதும் புதிதாய் பிறந்த பாலகரதும் நலன் பேணி அவர்களைச் சார்ந்தோரிடம் விழிப்புணர்வை ஊட்டும் அமைப்பின் பெயர் 'அனுதினமும் அன்னையர் தினம்' என்பதாகும்.

தன்னைப் பெற்ற தாய் தன் மனைவியைப் பெற்ற தாய் அண்ணன் மனைவி ஆசான் மனைவி ஆள்பவன் மனைவி என்று ஐவகைத் தாயாரை போற்றுபவன் பழந்தமிழன்.

ஊட்டிவிட்டு உறவாடிடும் அன்னையை பூரணத்துவம் மிகுந்தவளாக கருதும் தமிழர் கலாசாரம் மாதாமாதம் பூரணை தினத்தை அன்னையருக்காக்கி சித்திரை பௌர்ணமியில் வருடம் தோறும் உண்ணாமல் உள்ளத்தால் நிறையும்.

பசி என்ற சொல்லைக்கூட தம்மக்கள் புசிக்கக் கூடாது என்பதற்காக தானே பசியை உண்பவளும்- எந்தப் பருவத்திலும் வரும் விளையாட்டுக் காயங்களுக்கும் எந்தப் பருவத்திலும் தன் இதயத்தில் இரத்தம் வடிப்பவளும் இலங்கைத் தமிழ்த்தாய். அரை மணித்தியாலத்தில் நான்கு தடவையாவது தொலைபேசி மூலம் எங்கே இருக்கிறாய்? என்ன செய்கிறாய் எனக் கேட்டுக் கொண்டிப்பதும் - கேட்கும் பொழுதெல்லாம் கேட்காததையும் சேர்த்துத் தருவதும் கனடியத் தமிழ்த் தாய்.

உலகின் கர்ப்பத்தில் உள்ள குழந்தை கூட காற்றில் தொட்டிலுக்குத்தாவி அன்னையர் தினத்தை ஆராதிக்க விரும்புவது இனிமை. ஆனால் நவம்பர் 20 உலகெங்கும் பிள்ளைகள் நாள் வருகின்றதே'அன்றும் கூட ஈழத்தின் தொட்டிலில் உள்ள குழந்தையும் உலகின் கர்ப்பத்துள் பாய்ந்து தன்னை பாதுகாத்திடவே வீரிட்டு அழுவது மாற்றப்பட வேண்டிய கொடுமை' ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டாக்டர் விக்டர் பிகராடோவின் குறள் கூறும் மருத்துவம் நூல் வெளியீடு



டாக்டர் விக்டர் பிகராடோ அவர்களின் 'குறள் கூறும் மருத்துவம்' நூல் வெளியீடு அடுத்த மாதம் (ஜுன்) 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 6:30 மணி முதல் ஸ்காபரோ சிவிக் சென்டரில் நடைபெறவுள்ளது. அனைவரையும் நூலாசிரியர் அன்புடன் வெளியீட்டு வைபவத்துக்கு அழைக்கின்றார்.

## கூகுள் கண்ணாடி

உலகில் மிக அதிசயமான தொழில்நுட்பம். இன்ரர்நெட் உலகத்தையே ஆட்டிப் படைக்கும் கூகுள் நிறுவனம் இதனை அறிமுகப்படுத்துகின்றது. இக் கண்ணாடி 2012ம் ஆண்டு இறுதியில் விற்பனைக்குவர உள்ளது. கம்பியூட்டர் செயல்பாடுபோல இயங்கும் இக் கண்ணாடியில் உள்ள அம்சங்களே தனி. இதில் ஜி.பி.எஸ் என்னும் செயற்கைக்கோள் (சட்டலைட்) வழிநடத்தல் இருக்கிறது.

இதனூடாக நடை பயணிகள் ஒரு சாலையை அல்லது வீட்டை இலகுவாகக் கண்டுபிடிக்க முடியும். வீடியோ படம் எடுக்க முடியும். எடுத்த படத்தை நன்பர்களுக்கு 1 செக்கனில் அனுப்பவும் முடியும். அதுமட்டுமா' நாம் சொல்லும் கட்டளைகளை அது நிறைவேற்ற வல்லது. படம் எடு என்று மட்டும் சொன்னால் போதும் அது உடனே படம் எடுக்க ஆரம்பித்துவிடும். 4ம் தலைமுறை இன்ரர்நெட் வசதி- கொண்டதாக அது அமைந்துள்ளது. சிறந்த தேடுபொறியாகவும் அதனைப் பயன்படுத்தலாம் மொபைல் தொலைபேசி உள்ளது.



பொன்னையா விவேகானந்தன்

# புலவர் பாடாது வரைகஎன் நிலவரை

23

ஆளுமை கொண்டோர் தொடர்ந்து ஆண்டதாகவும் வரலாறு இல்லை. வீழ்ச்சியுற்றோர் மாட்சி பெறாது அழிவுற்றுப் போனதாகவும் சான்றுகள் இல்லை.

அழிவுபடுவதைப் போலவே, பேரெழுச்சி கொள்வதுவும் இயல்பானது. வீழ்ச்சியின் அளவுகோல்தான் எழுச்சிக்கும் உரியதாகின்றது. வீழ்ந்தவர்களுக்குள் இருந்து எழும் வஞ்சினந்தான், மற்றுமொரு எழுச்சிக்கான தளமாகின்றது.

நெடுஞ்செழியன்

தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டியன் எனப் புகழப்பட்டவன். இளம் வயதிலேயே சீறிச் சினந்து பகையழித்து நிலம் காத்த பெருமறவன். நெடுஞ்செழியன் இளமையிலேயே அரசுக்கட்டில் ஏறியவன். இவன் வெறும் சிறுவன், ஆளுமை இல்லாதவன் என்றெண்ணி எள்ளி நகையாடினர் பகைவர். சிறுவனையும் அழித்து, நிலத்தையும் பிடுங்க இதுவே பொருத்தமான காலம் என்றெண்ணினர்.

செய்தி செழியன் செவிகளுக்கு எட்டுகின்றது.

வெகுண்டெழுகின்றான். தன் நாட்டையும், மக்களையும் இழிவுபடுத்திப் பேசியவர்களைப் போரில் வென்று, அவர்களைச் சிதறடித்தல் தனது உயரிய கடன் எனக் கருதுகின்றான். அவ்வாறு தான் செய்யவில்லை எனில், அது தன்னுடைய பெருங்குற்றம் என உணருகின்றான். மக்களை அழித்து நிலம் கொள்ள முயலும் பகைவரை அழித்தலே தன் முறை எனக் கருதி, அவையோர் முன்னிலையில் சூள் உரைக்கின்றான்.

எம் பகைவர்களை நான் ஓட ஓட விரட்டாவிடில், தன் நிழலில் வாழுகின்ற மக்களின் துயரைப் போக்காத கொடியவன் இவன் என மக்கள் உன்னைத் தூற்றட்டும். மாங்குடி மருதன் போன்ற புலவர்கள் எம் நாட்டைப் பாடாது நீங்கட்டும். இரப்போருக்கு உதவ முடியாத வறுமை என்னை வந்தடையட்டும். என தனக்குத்தானே சாபமிடுகின்றான்.

எந்நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
கொடியன்எம் அறைஎனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை
பரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே. (புறம் 72)

சூழ்ந்திருக்கும் பகை வலிமையானதெனினும், எதிர்கொண்டு வெல்வேன் என் உறுதியேறிய சூளுரை, செழியனின் வெற்றியை அந்த இடத்திலேயே உறுதி செய்கின்றது.

பெரும் போர் அது. தலையானங்கானம் என்னும் பொருதிடலில் மொத்தப் பகைவரும் ஒன்றுகூடி செழியனை எதிர்த்தனர். பெருநில மன்னர், குறுநில மன்னர் என பெரும் அணியாய்த் திரண்டிருந்தது எதிரிகள் படை. ஒப்பீட்டளவில் செழியன் படை சிறியது.

வெஞ்சினமும், வீழ்ந்துவிடா உறுதியும் கொண்டு போரிட்ட செழியன் வரலாறு காணாத பெருவெற்றியை தலையானங்கானத்திடலில் பெற்றான். தன் மக்களையும் நிலத்தையும் காக்கும் அறப்பணியில் அழியா இடம் பெற்றான்.

வெற்றியைத் திட்டமிடுவது, பகையின் அளவும் வலிமையும் அல்ல. பகையை எதிர்கொள்வோரது, உறுதியும் அளவிட முடியா தன்னம்பிக்கையுமே. சாட்சிகளாக வரலா- றெங்கனும் பல செழியர்கள் வாழ்கின்றார்கள்.

அழிந்தவர்களின் ஆன்மாவும், சிதைந்த எம்நிலமும் வஞ்சினம் சுமந்த செழியர்களுக்காகக் காத்திருக்கின்றது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாத் தமிழ் ஊடகவியலாளர் இணையம் கண்டனம்

# 'கனடா உலகத் தமிழர்' ஆசிரியரின் வாகனம் எரிக்கப்பட்டது ஒரு கொலைப் பயமுறுத்தல் எச்சரிக்கை!

கனடிய முன்னணித் தமிழ் ஊடகங்களில் ஒன்றான 'கனடா உலகத்தமிழர்' பத்திரிகையின் ஆசிரியரும் வெளியிட்டாளரு மான திரு. ந. கமலவாசன் (கமல்) அவர்களின் இல்லத்தின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த அவரது வாகனம் 2012 ஏப்ரல் 23ஆம் திகதி திங்கட்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் மூன்றுமணியளவில் தீ மூட்டி எரிக்கப்பட்ட வன்செயலை கனடாத் தமிழ் ஊடகவியலாளர் இணையம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இதுதொடர்பாக ஊடகவியலாளர் இணையம் வெளியிட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:

பூரணமான ஊடக சுதந்திரமுள்ள கனடிய நாட்டில் ஒரு சுதந்திரமான ஊடகவியலாளர் மீது மிகக் கொடூரமான முறையில் திட்டமிட்டு நடத்தப்பட்ட ஓர் செயற்பாட்டின் அங்கமாகவே இதனை நாம் கருதுகின்றோம் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.



கருத்துகள் புனிதமானவை, விமர்சனங்கள் சுதந்திரமானவை' என்ற ஊடக தார்ப்பரியத்தை உணர்ந்துகொள்ளாத சில வி'மிகளின் செயலாகவே இதனைப் பார்க்க முடிகின்றது.

சிறிலங்கா சிங்கள தேசத்தில் ஊடகங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் நடத்தப்பட்டுவரும் தாக்குதல்களுக்கு நிகரானதாக, கனடாவிலும் தமிழ் ஊடகவியலாளர்மீது தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோ என்று சந்தேகிக்கும் அளவிற்கு இந்தத் தீமூட்டல் இடம்பெற்றுள்ளது.

இதனை சாதாரண ஒரு நிகழ்வாகவோ, தற்செயலான ஒன்றாகவோ ஊடகவியலாளர் இணையம் கருதவில்லை. திரு. கமலவாசன் மீது கடந்த மூன்று வருடங்களாக பல்வேறு வகையான அச்சுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தாக்குதல் முயற்சி, கொலைப் பயமுறுத்தல், கடத்தல் பயமுறுத்தல், பொது இடங்களில் தகாத வார்த்தைகளால் ஆத்திரமூட்டல் போன்ற பல சம்பவங்களையிட்டு காவல் துறையினரிடம் இவரால் புகார் செய்யப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளும், சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சூழ்நிலையில் அவரது சொந்த வாகனம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இதற்கான நோக்கம் என்ன என்பது பற்றி காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுவருவதால் நாம் மேலதிகமாக எதுவும் குறிப்பிடப்பட விரும்பவில்லை. ஆனால் இன்றைய காலத்தையும் சூழ்நிலையையும் பயன்படுத்தி கனடியத் தமிழ் சமூகத்தை கூறு போடவும், போர்க்குற்றம் புரிந்த சிறிலங்கா அரசாங்கத்தைக் கூண்டில் ஏற்றி குற்றவாளியாக்க கனடிய அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளை குழப்பியடிக்கவும், கனடிய அரசின் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இயங்கிவரும் 'கனடா உலகத்தமிழர்' பத்திரிகையை முடக்கவும், இவரது வாகனம் தீக்கிரையாக்கப்பட்டது அமைந்திருக்கலாம் என்று இணையம் கருதுகின்றது.

கடந்த சில மாதங்களுக்குள் இங்கு இடம்பெற்ற இவ்வகையான சில தாக்குதல், அச்சுறுத்தல் முயற்சிகளையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

அரசியல் ஆய்வாளர் நேரு குணரத்தினம் அவர்களுடைய வாகனம் சேதமாக்கப்பட்டது, அவர் மீது தாக்குதலும் இடம்பெற்றது. மூத்த ஊடகவியலாளர் திரு எஸ். திருச்செல்வம் மீது இரண்டு, மூன்று தடவைகள் பொது நிகழ்வுகளில் வைத்து பயமுறுத்தல் எச்சரிக்கை விடுக்கப்பட்டது, ஒரு தடவை தாக்குதல் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த வரிசையில் இப்பொழுது 'கனடா உலகத்தமிழர்' பத்திரிகையின் ஆசிரியரின் வாகனத்தை தீமூட்டி எரித்ததை அவருக்கும் அவரது குடும்பத்துக்கும் விடுக்கப்பட்ட கொலைப் பயமுறுத்தல் எச்சரிக்கையாகவே நாம் பார்க்கின்றோம்.

புலம்பெயர்ந்த நாட்டில் நாம் அனைவரும் கட்டிக் காத்து வளர்க்கவேண்டிய ஊடக சுதந்திரத்தை அழித்தொழித்து, கனடிய தமிழர் சமூகத்திற்கு முழுமையான தலைகுனிவை ஏற்படுத்தும் தீய சக்திகளைக் காவல் துறையினருக்கு அடையாளம் காட்டி, அவர்களைச் சட்டத்தின்முன் நிறுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழ் சமூக உறவுகள் அனைவரையும் பணிவுடன் கனடியத் தமிழ் ஊடகவியலாளர் இணையம் வேண்டுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லலிதா புரூடி



# முதுமையில் தனிமை

**முதியோர் மாதமாக ஜூன் மாதம் அமைவதால் இந்த சிறப்புக் கட்டுரை இடம்பெறுகிறது.**

மானிட வாழ்வு நீடிப்பதனால் உயரும் முதியோரின் எண்ணிக்கையுடன் அவர்களின் பிரச்சனைளும் கூடுகின்றன என்பதைப் பற்றி பலர் ஏற்கனவே நன்கு ஆராய்ந்திருக்கின்றனர். முதுமையில் தனிமை கொடியது. பலரை வாட்டுவது. இங்கு தமிழ் முதியோர் தனிமை பற்றி சிறிது அலசுவோம்.

தமிழரின் பாரம்பரிய கலாசாரக் கூட்டுக் குடும்ப வழக்கம் இப்போ பழங்கதையாகி விட்டது. தற்போதைய கடுகதி வாழ்வில் நேரப் பற்றாக் குறையினால், எமது சமூகத்தில் புலம்பெயர் நாடுகளிலும், இலங்கையிலும், பிள்ளைகள் பெற்றோரை காப்பகங்களில் சேர்ப்பது சர்வசகஜம். பணவசதியுள்ளோர்க்கு இது சுலபமான வழி. ஆனால் பணவசதி குறைவானவர்கள் முதுமையில் தமது தனிமையைச் சரிவரச் சமாளிக்க வருமுன் தடுப்பு நடவடிக்கைகளைக் கையாள்வது அத்தியாவசியம்.

நாம் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். வித்தியாசமான-வர்கள். எம் ஒவ்வொருவரிடத்திலும் ஏதாவதொரு திறமை நிச்சயம் இருக்கும். சிலர் நன்கு எழுதுவார்கள், வரைவார்கள். சிலர் சமைப்பார்கள். சிலர் தொண்டாற்றுவார்கள். எமது திறமையைப் பூரணமாக உபயோகித்து பயன்பெற்றால் எமது தன்னம்பிக்கை, சுயமதிப்பு, ஆளுமை வளர்ச்சி யாவும் நன்கு உயரும். இந்த மனத்திருப்தி இருந்தால் பிறரைத் துன்புறுத்தி வருத்தி, எமது அதிகாரத்தை நிலைநாட்ட வேண்டிய அகங்காரத் தேவை எம்மை விட்டு அகன்றுவிடும். நிபந்தனையற்ற அன்பு எமக்குள்ளிருந்து பெருகி, எம் சூழலில் உள்ளவர்களை ஆகர்ஷிக்க, சிறந்த உறவுகள் உருவாகும். சிந்தனை, சொல், செயல் மூன்றும் ஒத்திசைய, மனித மேம்பாடுகளுடன் நாம் தார்மீகமாக வாழ்ந்தால், எம்மை யாவரும் விரும்பி மதித்து, நாடி வருவர்.

இத்தகைய மாண்பு மிக்க பலர், தமது முதுமையில் பல சாதனைகளை நிலைநாட்டி உலக சரித்திரப் புகழ் பெற்றுள்ளனர். அன்னை தெரேசா, மகாத்மா காந்தி, ஐன்ஸ்டீன், சர்ச்சில், ஹெலன் கெல்லர், மண்டேலா போன்றோர் தம் முதுமையிலும் தீவிரமாகச் செயல்பட்டார்கள். நான், எனது குடும்பம் என்ற வட்டத்திலிருந்து வெளியேறி பிறர் நன்மைக்காக தொண்டாற்ற ஆரம்பித்தால், பல சந்தர்ப்பங்கள் நிச்சயம் எம்மைத் தேடி வந்து எம்மை ஊக்குவித்து உதவும். காய்தரும் மரத்திற்குத் தான் கல்லெறி என்றாலும் அதைப் பொருட்படுத்தித் தேங்கி நிற்காமல் தொடர்ந்தும் செயல்பட்டு முன்னேறினால், நேரப் பற்றாக்குறை தான் வரும்' தனிமை பறந்தோடி விடும்' இது என் அனுபவம்.

முதுமையில் தனிமையை விரட்டுவதற்கு வேறு எத்தனையோ வழிகளும் இருக்கின்றன. எவரும் எளிதில் பழகக் கூடிய வாசிப்பு, எழுத்து, தோட்டக்கலை, யோகம், தியானம், ஆன்மீகம், பிரார்த்தனை, பஜனை, சங்கீதம், வாய்ப்பாட்டு, வாத்திய இசை, தொண்டாற்றல், தையல், உடற்பயிற்சி, நட்பு, செல்லப்பிராணிகள், பொழுது போக்குகள் தனிமையை முறியடிக்க சிலர் துரதிர்ஷ்டவசமாக மது, போதைவஸ்து, சிகரெட், சூது, பாலியல் வன்முறை, வன்முறை போன்றவற்றுக்கும் அடிமையாகி விடுகின்றனர். ஆகவே கவனமெடுத்து இவற்றைத் தவிர்க்க வேண்டும். வினை விதைத்தால் வினை, தினை விதைத்தால் தினை' எமது வாழ்வை வளமாக்குவதும் அவலமாக்குவதும் எமது பழக்க வழக்கங்கள் தான்.

பல தமிழ் தம்பதிகள் ஒன்றாக வாழ்ந்தாலும் மனவேற்றுமைப்பாட்டினால் புளியம்பழமும் ஓடும்போல் தொடர்பின்றி வாழ்வது எமக்குத் தெரியும். விவாகரத்தும் இல்லை' உளவளத்துணை உதவியினால் பிரச்சனைகளைத் தீர்க்கும் முயற்சியும் இல்லை' இவ்வாறு பலர் ஏனோதானோ என வாழ்வதை மாற்றுவதற்கும் எமது சமதாயம் முயற்சி செய்ய வேண்டும். உளவளத்துணையைப் பற்றி பல தமிழர்களுக்கு ஒன்றுமே தெரியாது. தமிழ் இளஞ் சமுதாயம் மேலும் பல உளவளத் துணையாளர்களை உருவாக்க கல்வி பயில வேண்டும். கணவன் ஒரு பிள்ளையுடன் லண்டனிலும் மனைவி கனடாவிலுமென பல தம்பதிகள் பிரிந்து தனிமையில் வசிப்பதைத் தவிர்க்க முயற்சிக்க வேண்டும்.

தமிழ் கணவர்கள் தாரம் இழந்ததும் உடனே மறுமணம் செய்வது சாதாரணம். ஆனால் தமிழ் விதவை மறுமணம் செய்வது சுலபமானதல்ல. எனது உறவு இளம் விதவை ஒருவரை வற்புறுத்தி மறுமணம் செய்விக்காத தவறினால், அவர் இப்போது தனிமையில் துன்புற்று வாடுவது எனக்குத் தெரியும். ஆகவே ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற பாரம்பரியத்தை நாம் அவசியம் ஏற்படும்போது கைவிட்டு, விதவை விவாகத்தை ஊக்குவிக்க வேண்டும்.

முதுகன்னிகள் பலரும் தனிமையில் வாடுகின்றனர். இவர்களுக்கு உதவுவதற்கு எமது சமுதாயம் முன்வர வேண்டும். 'இவ்வளவு வயதாகிவிட்ட பிறகு என்ன கல்யாணம் எனக்கு' என்று வெளியில் கூறினாலும், வாழ்வதற்கு யாருக்குத்தான் ஆசையில்லை? தமது பிரச்சனைத் தீர்விற்காக ஏங்குபவருக்கு நான் கூறும் ஆலோசனை 'நான் இப்போ இந்த வயதில் இப்படி திருமணம் செய்தால் சமுதாயம் என்னைப் பற்றி என்ன கதைக்கும்' என்ற எண்ணத்தில் நீங்கள் செயற்படாதிருப்பது தவறு. பிறருக்கு தீங்கு விளைவிக்காது, எந்த வயதிலும், ஒருவரை ஒருவர் விரும்பினால், நீங்கள் திருமணம் செய்வதில் தவறே இல்லை. எங்கள் சமுதாயத்தில் இப்படி நடப்பதில்லை என்ற சாக்குப்போக்கு தவறு. எமது சமுதாயத்திலும் மற்ற சமுதாய குடும்பங்களில் நடப்பதெல்லாம் நடக்கின்றன. நாம் கண்ணை மூடிக் கொண்டு அவற்றை பற்றிப் பேசுவதில்லை. அவ்வளவுதான்'

நாம் ஒவ்வொருவரும் எமது ஆளுமையைச் சரிவரப் போஷித்து மனித மேம்பாடுகளுடன் வாழ்ந்தால் எமது குடும்ப உறவுகள் சீரும் சிறப்புமாக அமையும். இளையவர்களும் முதியவர்களும் தோழமையுடன் இணைந்து மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா. சம்பந்தன்

# இன்றைய அறிவியலுக்கு அன்றைய செய்தி ஒன்று



சமய உலகிலே மிகவும் அறியப்பட்ட ஒரு கதை பிரகலாதன் கதையாகும். இரணிய மன்னனுக்கு மகனாகப் பிறந்து நாராயண நம என்று எப்போதும் திருமாலின் நாமத்தைச் சொன்னவன் பிரகலாதன்' தனது எதிரியான திருமால் பெயரை மகன் உச்சரிப்பதைப் பொறுக்க முடியாமல் அவனைக் கொலை செய்யத் துணிந்தான் இரணியன்.

உன் கடவுள் எங்கே இருக்கிறான் என்று கேட்டான் இரணியன். என் கடவுள் இந்தத் தூணிலும் இருப்பான்' துரும்பிலும் இருப்பான் என்றான் பிரகலாதன். மகன் காட்டிய தூணைக் கதாயுதத்தால் அடித்துத் தகர்த்தான் இரணியன். இது தான் சமயம் என்று திருமால் நரசிங்க கோலத்தில் கூட்டணியாக வந்தார். இரணியனைப் பிடித்து தன் மடியிலே வைத்து நகத்தால் பிளந்து கொன்றார்' இது தசா அவதாரத்தில் வரும் நரசிங்க அவதாரக் கதையாகும்.

எமக்கு இந்தப் புராணக் கதை முக்கியமல்ல. இந்தப் புராணக் கதையில் வருகின்ற ஒரு மருத்துவச் செய்தி தான் முக்கியமானது.

இரணிய மன்னன் இறைவனைக் குறித்துத் தவம் செய்ய எண்ணிய போது நிறைமாதக் கர்ப்பிணியாக பிரகலாதனை வயிற்றில் சுமந்து கொண்டிருந்தாள் அவன் பட்டத்துத் தேவி லீலாவதி' தந்தை கொடியன் ஆகையால் குழந்தையும் கொ-டியவனாக இருப்பான் எனவே குழந்தையை அழித்துவிட வேண்டும் என்று தேவர்களின் அரசன் இந்திரன் எண்ணுகிறான். தான் தவம் முடித்து வரும்வரை தன் மனைவிக்கு தக்க பாதுகாப்புக்கு ஆள் தேடினான் இரணியன்.

நாரத முனிவர்தான் அதற்குச் சிறந்தவர் என்று எண்ணி அவரின் ஆச்சிரமத்துக்கு மனைவியை அழைத்து வந்து அவர் பாதுகாப்பில் விட்டுச் சென்றான். இரணியன் சென்றதும் அவன் மனைவி கவலையாக இருந்தாள். ஏன் கவலையாக இருக்கிறாய் என்றார் நாரதர். முனிவரே' கணவர் இல்லாத காலத்தில் இந்தக் குழந்தையை நான் பெற்றுக் கொள்ள விரும்பவில்லை என்றாள் தேவி.

பெண்ணே' நீ கவலையை விடு. உன் கணவன் தவம் முடித்துத் திரும்பி வரும்வரை உன் வயிற்றிலுள்ள குழந்தை வளராமலும் பிறக்காமலும் அழியாமலும் இருக்க ஆவன செய்வேன். வயிற்றில் இருந்து கொண்டு இந்த ஆச்சிரமத்தில் ஒலிக்கும் வேத மந்திரங்களைக் கேட்டு உன் குழந்தை இறை உணர்வோடு பிறக்கும் என்றார் நாரதர்.

அவர் சொன்னது போல இரணியன் தவம் முடித்து வரும் வரை தாயின் வயிற்றிலே உறை நிலையில் வைக்கப்பட்டான் குழந்தையாகிய பிரகலாதன்' அது மட்டுமல்ல. நாராயண நாமத்தைச் சொல்லும் நாரதர் ஆச்சிரமத்தில் கருவாக இருந்ததால் கருவிலேயே நாராயண நாமம் அவன் மனதில் படிந்து போனது.

இரணியன் தவம் செய்த ஆண்டுகள் ஆயிரம் என்று புராணம் கூறுகின்றது. அது பொய் என்றாலும் இன்னும் பத்து மாதங்கள் என்று கொள்வோம்.. பத்து வாரங்கள் என்போம்' பத்து நாட்கள் என்று குறைத்துக் கொள்வோம். அதுவல்லப் பிரச்சனை. ஒரு குழந்தையை அது பிறக்க வேண்டிய காலம் வந்து விட்ட போதும் சில காரணங்களுக்காக அதன் பிறப்பைத் தள்ளிப் போட்டு அதுவும் மேற்கொண்டு வளராத உறை நிலைக்கு அதை ஆளாக்கி வைத்து குழந்தைக்கும் தாய்க்கும் எந்தவித ஆபத்தும் இன்றி விரும்பிய போது பெற்றெடுத்துக் கொள்கின்ற ஒரு வழி முறை அன்று ஒரு மனிதனுக்குத் தெரிந்திருக்கின்றது.

இன்றைய மருத்துவ விஞ்ஞானம் இப்போது தான் ஆண் பெண் கருக்களை குளிரூட்டிப் பாதுகாக்க அறிந்திருக்கிறது. வயிற்றுக்கு வெளியே கருவை இணைத்து வளர்க்கின்றது. ஆனால் எவ்வளவோ காலத்துக்கு முன்பு ஏதோ ஒரு மூலிகையை கொடுத்து அல்லது ஏதோ உடற்பயிற்சி மூலம் பிறப்பைத் தள்ளிப் போட்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல ஒரு கருவை வயிற்றிலேயே வளர்ச்சி அடைய விடாமல் உறங்கு நிலையில் வைத்திருந்திருக்கிறார்கள். இன்றைய விஞ்ஞானம் சிந்திக்க வேண்டிய செய்தி தானே இது'

இன்றைய மருத்துவமனை எதிலுமே குழந்தை பிறக்க வேண்டிய காலம் ஒரு நாள் பிந்தினாலும் தாய் வயிற்றை வெட்டி எடுக்கும் கலாசாரமே காணப்படுகின்றது. தாயின் உயிருக்கு ஆபத்து என்கிறது இன்றைய மருத்துவம். ஆனால் காட்டிலே ஆச்சிரமக் குடிலில் கரு உறங்க வைக்கப்படுகின்றது பிறக்க அனுமதிக்காமல்' தாய்க்கு ஆபத்து இல்லாமல்' இதில் பிறக்க விடாமல் தடுக்கும் நடவடிக்கை மட்டும் முக்கியமல்ல மேற்கொண்டு வளர விடாமல் தடுத்ததாக சொல்கிறார்களே எதைக் கொண்டு தடுத்தார்கள்? மூலிகைச் சாற்றைத் தாய் குடித்தாளா? இல்லை குழந்தைக்குக் கொடுத்தார்களா? குழந்தைக்கு என்றால் எப்படிச் செலுத்தினார்கள்? எதைக் கொண்டு செலுத்தினார்கள்?

இதெல்லாம் என்ன? நாம் இப்போது தேவையான நேரத்தில் பயன்படுத்துவதற்காக கருவை உறங்கு நிலையில் வைத்து பாதுகாப்பது போல இனி வரும் காலத்தில் தாயின் வயிற்றிலும் குழந்தையை உறங்கு நிலையில் வைத்திருக்கும் மருத்துவக் கண்டுபிடிப்பைச் செய்வோமா? அப்படி செய்யலாம் என்ற நம்பிக்கையையாவது இக் கதை மூலம் வளர்த்துக் கொள்வோமா? அல்லது வழக்கம் போல புராணங்கள் கட்டுக்கதை என்று கூறி எம் இயலாமையை மறைத்து விடுவோமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்'

தமிழிலே அழிந்து போன உரோமமுனி வடுகம் என்ற நூலிலே அறுவைச் சிகிச்சை செய்யப்படும் முறை பற்றி விரிவாகக் கூறப்பட்டிருந்ததை தப்பிப் பிழைத்த ஒரு சில பாடல் அடிகள் காட்டி நிற்கின்றன. கோரக்கர் மூலிகைப் பயன் என்ற நூலும் இன்று இல்லை. அது இருக்குமானால் எத்தனையோ நோய்களுக்கு விடை கண்டிருக்கலாம்' இவை போல பதிற்றுப் பத்து என்ற சங்க இலக்கியத்திலே வெட்டுக் காயங்கள் ஊசி கொண்டு தைக்கப்பட்டு வந்தது தெரிவிக்கப் படுகின்றது. தஞ்சைக் கல்வெட்டு ஒன்றிலே முக்கூடல் என்ற ஊரிலே பதினெட்டுப் படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனை ஒன்று இருந்த செய்தியும் அதில் அறுவைச் சிகிச்சை நடந்த செய்தியும் நோயாளிகளைப் பராமரிக்கும் இரு தாதிமார்கள் இருந்த செய்தியும் குறிக்கப்படுகின்றது.

கி.பி 1121 கல்வெட்டு ஒன்றிலே வாக்குப்பாதர் என்ற மருத்துவர் எழுதிய அட்டாங்க இருதயம் என்ற இருதய நோய்கள் சம்பந்தப்பட்ட நூல் மருத்துவப் படிப்பு மாணவர்களுக்கு பாடப் புத்தகமாக இருந்ததாக குறிக்கப்பட்டுள்ளது. வந்திருக்கும் நோயை முதலில் கண்டுபிடியுங்கள். அப்புறம் அந்த நோய் வந்த காரணத்தைக் கண்டுபிடியுங்கள் பின்பு அந்த நோயை மாற்றக் கூடிய மருந்தைச் சரியாகக் கொடுங்கள்' இது இன்றைய மருத்துவம் சொன்னது அல்ல. அன்றைய திருக்குறள் சொன்னது.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்' ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயின்ரஸ் துரைசிங்கம்

# புதியரக வியாபாரம்

## திருந்துவரா நம்மவர்

ஒரு காலத்தில் நமது நாட்டில், வீடு தேடிச்சென்று நேரிலும், தூர நகரங்களில் அல்லது தூர தேசங்களில் வாழ்வோருக்காக தபால் மூலமும் அனுப்பப்பட்டுவந்த விசேட அழைப்புக்கள், வேகமான மேற்குலக வாழ்க்கையின் சங்கடங்கள் காரணமாக புலம்பெயர் நாடுகளில் தொலைபேசி அழைப்புக்களாகவும் மின்னஞ்சல் அட்டைகளாகவும் மாற்றமடைந்து சென்றன.

திருமணம், பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா போன்ற பிரத்தியேக குடும்ப விழாக்களுக்கான அழைப்பை, தற்போதும் குடும்பத்தினர் தொலைபேசி மூலம் வழங்கி வருகிறார்கள். நேரடியாக வீட்டிற்குச் சென்று வரவேற்பதற்கு முயற்சியெடுத்த காலம் ஒன்று உண்டு.

இருப்பினும் காலவோட்டத்தில் இது தொடர்பான நடைமுறைச் சிரமங்களை உணர்ந்துகொண்ட எமது மக்கள், தொலைபேசி அழைப்பை நேரடி அழைப்பாக ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தார்கள். இது வரவேற்கத்தக்க ஒரு மாற்றம்.

இது போன்றே இங்கு இடம்பெறும் மேடை நிகழ்வுகள், கலை விழாக்கள், அரங்கேற்ற நிகழ்வுகள், ஊர் மற்றும் பாடசாலை நிகழ்வுகள், புத்தக வெளியீடுகள் போன்ற பல்வேறு விடயங்களுக்கும் கூட, தொலைபேசி அழைப்புக்களே பொதுவான பிரத்தியேக அழைப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. இதுகூட மிக நல்லதொரு மாற்றம்.

இத்தகைய நல்ல மாற்றங்களுக்கு நடுவே, புதியதொரு இடக்கரடக்கலான வில்லங்கம் தரும் மாற்றமொன்று, பலருக்கும் சங்கடமாக உருவெடுத்து வருவது பலராலும் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்தச் சங்கடத்தை இம்முறை நோக்கலாம்.

தமிழர்கள் செறிந்து வாழும் ரொறன்ரோ பெருநகர் மற்றும் மொன்றியல் நகரங்களில், புத்தகம் மற்றும் இசைத்தட்டு வெளியீடுகள் நிறையவே நடைபெறுகின்றன. இத்தகைய வெளியீடுகள் முடிவடைந்த பின்னர், தொடரும் நாட்களில் தெரிந்த நண்பர்கள் மற்றும் எழுத்துலக கலையுலக பிரமுகர்களுக்கு அந்தப் புத்தகங்கள் அல்லது ஆல்பங்களைக் கொடுப்பது நல்ல விடயம் தான்.

ஆனால், வேறு யாரோ செலவழித்து நடத்துகின்ற நிகழ்வுகள், சந்திப்புக்கள் அல்லது விழாக்களில், இந்தப் புத்தக அல்லது சி.டீ. வெளியீட்டாளர்கள் கலந்துகொண்டு, அந்த நிகழ்வை புத்தகச் சந்தையாக மாற்ற முயற்சிப்பதும், புத்தகங்களை வாங்கும்படி கோருவதும், வரவேற்க முடியாத ஒரு புதிய மாற்றம்.

இதுபோன்றே, நிகழ்வுகளுக்கான அனுமதிச் சீட்டுக்கள், திரைப்பட அனுமதிச் சீட்டுக்கள், அதிர்ஸ்டலாபச் சீட்டுக்கள் போன்ற பலவற்றையும், ஏனையவர்களது நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்ள வந்திருக்கும் பிரமுகர்கள் கையில் திணிக்க முயற்சிப்பது, தவறான ஒரு செயல் என்றே தென்படுகிறது.

இதிலும் ஒருபடி மேலே சென்று, கார்த் தரிப்பிடங்களில் நின்றும், கடை வாயில்களில் நின்றும், விழா மண்டப வாயிலுக்கு வெளியே நின்றும், சொந்தப் புத்தகங்களை விற்க முயற்சிப்பது, நுழைவுச் சீட்டுக்கள், அதிர்ஸ்டலாபச் சீட்டுக்கள், சி.டி. குறுந்தகடுகளை விற்க முயற்சிப்பது போன்றவை அவசியம் நிறுத்தப்பட வேண்டிய முத்தாய்ப்புக்கள்.

வெளியீட்டிற்குப் பணச்செலவு இருந்தால், அதை ஈடு செய்ய, வெளியீட்டு நிறுவனங்களை நாடலாம், விளம்பரங்கள் சிலவற்றை எடுக்கலாம் அல்லது புத்தகங்களை விற்பதற்கு மாற்று வழிகளை ஆராயலாம்.

குறிப்பிட்டவர்களை அழைத்து, அவர்களைச் சந்தித்து புத்தகங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அதைவிடுத்து, எதிர்பார்க்காத நேரத்தில், பல பிரமுகர்கள் மத்தியில், சிலரைச் சங்கடத்தில் ஆழ்த்தும் வகையில் வியாபார முயற்சிகளை முன்னெடுப்பது, தவிர்க்கப்பட வேண்டிய விடயம்.

அவசர அவசரமாக கைகளில் திணிக்கப்படும் சில அழைப்பிதழ்களில், பெயர் எழுதப்பட வேண்டிய இடங்கள் வெறுமையாகவே இருப்பது, வழங்குனரின் வர்த்தக நோக்கைக் காட்டுகிறதே தவிர, அவரது சமூக அக்கறையையோ மனிதத்தை மதிக்கும் பண்பையோ ஒட்டுமொத்தம் தலைகீழாக மாற்றி விடுகிறது என்பதை நாம் உணர்வது அவசியம்.

நெருங்கிய நண்பர்களை எங்கே கண்டாலும், எதையும் கொடுக்கலாம் - வாங்கலாம். ஆனால், அதே நிலைப்பாட்டை ஏனைய கலைஞர்கள், பிரமுகர்கள், எழுத்தாளர்கள் அல்லது துறைசார் வல்லுனர்கள் போன்றோர் மத்தியிலும் எடுத்துச்செல்ல முயற்சிப்பது நாகரிக வளர்ச்சியை பின்நோக்கித் தள்ளுகின்ற செயலாகவே கருத வேண்டியுள்ளது.

திருத்திக் கொள்ளலாமே!! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# எனக்கோர் சுதந்திரம் இல்லையப்பா

"எனக்கோர் சுதந்திரம் இல்லையப்பா" என்னும் பாடலடி தாயுமான சுவாமிகளின் அருள்வாக்கு. எந்தப் பெரிய மகான் அவர். அவரே எம்பெருமானை விளித்துத் தனக்குச் சுதந்திரம் இல்லையெனப் பாடாமல், 'எனக்கு ஓர் சுதந்திரம் இல்லை" யென நிதானமாகச் சொல்கின்றார். இதிலே எம்பெருமானையே 'அப்பா" என உரிமையோடு அழைக்கின்றார். அந்தப் பெருமகனார் எங்கே? நாங்களெங்கே. 'அம்மையே அப்பா" என்பது மணிமொழியார் அழைப்பு. இந்த முறைப்பாட்டிற்கு என்ன விடை? எனக்கு இந்த ஆத்மாவுக்கு விடுதலை வேண்டும் என்பதாம். பொதுமக்களுக்கு இப்படியொரு உள்ளுணர்வு தட்டுமா? இந்தச் சுதந்திரம் என்ன சுக்கா மிளகா இலகுவில் வேண்ட. படாதபாடுபட்டே சுதந்திரத்தை அடைய வேண்டும்.

சுதந்திரத்துக்கு எதிர் பரதந்திரம். அவர் சுதந்திரத்தைப் பெற ஆவன செய்வது போன்று நாமும் இனி வாளாதிருக்க முடியாது. ஆகவே சைவசமயிகளாகிய நாம் ஒவ்வொருவரும் சுவாமிகளின் பாதையிலே நடந்து எம்முயிர் விடுதலை பெற முயல வேண்டும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியே. உலக வரலாற்றை ஒருமுறை புரட்டிப் பார்த்தால் தன் நாட்டுக்காக தன் சமுதாயத்துக்காக விடுதலைத் தூணை நோக்கி உழைத்த சிற்பிகளைக் காணலாம். எனவே இந்தச் சுதந்திரப் பாதையைப்போட அவர்கள் எப்படியெல்லாம் அயராது உழைத்திருப்பார்கள். அவர்களின் தன்னலமற்ற சேவையால் நாம் சுதந்திரர்களாக வாழ்கிறோம்.

இரத்தம் சிந்திய புரட்சிகளெத்தனை தம் உயிர்களைப் பரித்தியாகம் செய்தோர் எத்தனை பேர். அவர்களின் அடிச்சுவட்டிலே நாமும் நடந்து கஷ்டங்களை வென்று இலட்சியத்தை எய்த வேண்டும். இந்த இலட்சியவாதிகளை, அமெரிக்காவிலே, பிரான்சிலே, ரஷ்யாவிலே, தென்னாபிரிக்காவிலே (மண்டேலா) ஏன் பாரத நாட்டிலே காண்கிறோம். இவர்கள் தான் வரலாறு படைத்த புருஷோத்தமர்கள். பாரதநாடு பழம் பெருநாடு இப்பாரத நாட்டைப் பாடியவர் மகாகவி பாரதியார். விடுதலை பெற்ற பாரத நாட்டைக் காணும் பாக்கியம் அவருக்குக் கிட்டாவிடினும் அவரது கனவு நனவாவானது. விடுதலை காணமுன்னரே ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமேயென்று தோள் கொட்டினார் (பாரதி பாடல் சுதந்திரப் பள்ளு - 31). "போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும்" என்ற மகுடத்திலே எழுதிய கவிதையில் "இளையபாரதத்தினாய் வா வா" என்று குறிப்பிடுகின்றார்.

இளைய பாரத்தினாய் வா வா வா
எதிரிலா வலத்தினால் வா
ஒளியிழந்த நாட்டிலே நின்றே றும்
உதய ஞாயி றொப்பவே வா வா
களையிழநத நாட்டிலே முன்போலே
கலைசிறக்க வந்தனை வா வா வா
விளையு மாண்பு யாவையும் பார்த் தன்போல்
விழியி னால்விளக்குவாய் வா வா வா பாடல் 7

இந்த விடுதலைச் சிந்தனையில் வடித்த கவிதைகள் சில வருமாறு

விட்டுவிடுதலை யாகிநிற் பாயிந்தச்
சிட்டுக்குருவியைப் போலே
3. விடுதலை சிட்டுக்குருவி
வேண்டுமடி எப்போதும் விடுதலை அம்மா
4. விடுதலை வேண்டும்
பறையருக்கும் இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை, 30 - விடுதலை
மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திர த்தின்
மாண்பினை யிழப்பா ரோ?
26. சுதந்திரப் பெருமை - 6
என்று தணியும் இந்த சுதந்தி ரத்தின்
மாண்பினை இழப்பாரோ 276 - சுதந்திரப் பெருமை

இந்தச் சுதந்திர(த்) தாகம் ஒரு வட்டத்துள் அமைந்தது அன்று. நாடு மக்கள் மொழியையும் கடந்து எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், வாக்குச் சுதந்திரம், பெண்கள் விடுதலை போன்ற பல இலட்சியங்களின் கருதுகோளே சுதந்திரம். இஃது ஒரு உயரிய முயற்சி.

எதற்கும் சமுதாயம் வேண்டும். இக்கண்ணோட்டத்திலேதான் தாயுமான சுவாமிகளும் சுதந்திரத்தின் கனதி காத்திரத்தைச் சமைய நோக்கிக் காட்டியுள்ளார்.

எனக்கோர் சுதந்திர மில்லையப் பாஎனக்கு
எய்ப்பில் வைப்பாய்
மனக்கோதகற்றும் பரம்பொரு ளே'என்னை
வாழ்வித்திட
நினக்கே பர(ம்), நின்னைநீங்காத பூரண
நீள்கருணை
தனக்கேபரம், இனிச்சும்மா விருக்கத் தகு மென்றுமே.

பாயம் 16

பொருள்:
அப்பா அப்பனே' எனக்கே - அடியேனுக்கு, எய்ப்பில் - இணைப்பில் வைப்பு ஆய - அடைக்கலப் பொருளாய், மனக்கோது - மனக்கிலேசத்தினை - கிலேசம் (துன்பம் - பயம் - கவலை) அகற்றும் - நீக்கும் பரம்பொருளே' மேலானவஸ்துவே, என்னை - அடியேனை வாழ்த்திடல் - வாழவைப்பது, நினக்கே - தேவரீருக்கே பரம் - கடமையாம், (அன்றியும்) நின்னை - தேவரீரை நீங்காத - பிரியாத, பூரணம் - பூரணமாகிய, நீள்கருணை - நீள்கருணை தனக்கே - பெருங்கருணைக்கே, பரம் - கடமை யாம் (இது வாய்த்தால்), இனி - இனிமேல், சும்மா இருக்க - அடியேன் மவுனமுற்றிருக்க, என்றுமே தகும் - எக்காலமும் தகும் என்க.

எனக்கோர் சுதந்திரமில்லை - என்றதனால் ஆன்மா எக்காலத்தும் பரதந்திரனேயன்றி சுதந்திரன் அல்ல. இறைவனே சுதந்திரம்.


மனிதவாழ்வு உயர்ந்தது. பிறப்பை அறுக்க வந்த பிறவியே மனிதப்பிறவி. எனவே நம் வாழ்வின் இலட்சியம் இறைவனை அடைதல். இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ தெரியாது. எனவே நாம் ஆத்மபூரணம் அடைய வேண்டும். ஆதலின் எமக்கு ஆத்மவிடுதலை பெறலே இலட்சியம்.

நாம் ஒவ்வொருவரும் உண்டு உடுத்து மக்கட் செல்வங்களைப் பெற்று ஆடம்பரமாக வாழ்கிறோம் விழாக்கள் கொண்டாடுகிறோம். எங்கள் உயிர் இறைமயமாகி அவனை வந்தித்து வாழ்த்தினாற் போதாது. இந்த உயிர் இணைப்பான நிழல் வேண்டும். தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது. எனவே ஆத்மவிடுதலைக்காக உழைப்போமாக.●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் ஆதரவுக்கு எங்கள் நன்றி!

## உங்கள் நன்றிக்கு எங்கள் நன்றி!






கடந்த மாதம் இரண்டாம் திகதி சற்றே வித்தியாசமான ஒரு நிகழ்வு கனடிய நாடாளுமன்ற முன்றலில் இடம்பெற்றது. வழக்கமாக, கண்டனப் பேரணிகளும் வேண்டுதல் ஆர்ப்பாட்டங்களுமே இங்கு இடம்பெறுவதுண்டு. 2009 மே மாதத்துக்கு முன்னர் உண்ணாவிரதங்கள் உட்பட தமிழரின் பேரணிகள் அடுத்தடுத்து இடம்பெற்றன. ஆனால் கடந்த மாதம் கனடியத் தமிழர் நடத்திய நிகழ்வு நன்றி கூறுவதற்கானது. "கனடாவே! உனக்கு எங்கள் நன்றி!" என்று கூடியிருந்த சிறார்கள் முதற் குரல் கொடுக்க, திரண்டிருந்த அனைவரும் கூடவே குரல் எழுப்பினர். கனடிய நாடாளுமன்றக் கட்டடம் தனது வரலாற்றில் முதற் தடவையாக இப்படியான வார்த்தைகளை அன்றுதான் கேட்டிருக்குமென்று துணிந்து கூறலாம். முக்கியமாக, அண்மைய காலத்தில் கனடியப் பிரதமரும், கனடிய வெளிவிவகார அமைச்சரும் இலங்கையின் மனித உரிமைகளுக்கு எதிராக எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு நன்றி கூறுவதற்காக இந்த நிகழ்வு ஏற்பாடாகியிருந்தது. பிரதான மூன்று அரசியல் கட்சிகளதும் சுமார் முப்பதுக்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனித்தனியாகவும், கட்சிக் குழுக்களாகவும் வந்து நன்றிக்கான நினைவுப் பூக்களைச் சிறார்கள் வழங்க அதனைப் பெற்று நுகர்ந்தவாறு உரையாற்றினர். கூடியிருந்த மக்கள் "உங்கள் ஆதரவுக்கு எங்கள் நன்றி!' என்று குரலெழுப்ப, "உங்கள் நன்றிக்கு எங்கள் நன்றி" என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதிலெழுப்ப....நாடாளுமன்ற முன்றலில் அது எதிரொலித்து, கடந்த கால நினைவுகளை ஒரு தடவை இதயக் கூட்டுக்குள்ளிருந்து வெளியே எடுத்து வந்தபோது, கண்கள் பனித்தன. இன்னொரு வரலாற்று நாளாக 2012 ஏப்ரல் 2 பதிவாயிற்று!







## Tamil Canadians salute Canada for standing up on Human rights in Sri Lanka

Tamil Canadians gathered in hundreds on Parliament Hill on Monday, April 2nd to thank the Canadian government for its efforts in championing human rights for the relatives of Tamil Canadians in Sri Lanka.

Specifically the community gathers to thank the personal efforts of both Prime Minister Harper and Foreign Minister Baird along with many members of the Conservative, NDP and Liberal caucuses who have championed this issue.

Also the community notes the active involvement of the government in a key issue for the community as an indicator that Prime Minister Harper and Minister Baird embody the tradition of caring for human rights of their relatives that was commenced by former Prime Minister Mulroney when he welcomed members of our community to Canada The Community also offers thanks to ordinary Canadians, and human rights organizations along with members of the media who have continued to highlight the ongoing violations of human rights in Sri Lanka. Over 30 prominent members of parliament from the all three main parties, step out of the parliament and address the crowd and urged for an independent international investigation in Sri Lanka.

Also Tamil Canadian delegations met with 15 Ambassadors and their staffs in Ottawa to hand over the letter of appreciation to their head of state for their recent decision to stand with the United States of Americas and Canada's resolution on Sri Lanka at the 19th session of the United Nations Human Rights Council in Geneva .




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்ராறியோ என். டி. பி. தலைவராக நீதன் சண் தெரிவு

# Neethan Shan wins Ontario New Democratic Party Presidency

ஒன்ராறியோ புதிய ஜனநாயகக் கட்சியின் (என். டி. பி) புதிய தலைவராக நீதன் சண் தெரிவு செய்யப்பட்டுள்ளார. கடந்த மாதம் 13ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரையும் ஹமில்ரனில் நடைபெற்ற கட்சியின் மாநாட்டில் இத்தெரிவு நடைபெற்றது. தலவர் பதவிக்குக் கட்சியின் மூன்று உறுப்பினர்கள் பேட்டியிட்டனர்.

மாநாட்டில் கலந்துகொண்ட சுமார் 800க்கும் அதிகமான தொகுதிகளின் பிரதிநிதிகள் (delegates) வாக்களிப்பில் கலந்து கொண்டனர். மேற்குலக அரசியல் கட்சிகளின் யாப்பில், கட்சியின் லீடர் (Leader) ஆக நாடாளுமன்ற அல்லது மாகாண அரசுக்குத் தெரிவானவர்களில் ஒருவர் தெரிந்தெடுக்கப்படுவார். அதுபோன்று, கட்சியின் தலைவர் (President) பதவிக்கு அதன் உறுப்பினர்களில் ஒருவர் கட்சிப் பிரதிநிதிகளால் தெரிந்தெடுக்கப்படுவார்.



ஒன்ராறியோ என். டி. பியின் Leader ஆக அன்றியா ஹொவார்ட் உள்ளார். கட்சியின் President ஆக நீதன் சண் சுமார் இருநூறுக்கும் அதிகமான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கனடாவில் அரசியல் கட்சி ஒன்றின் தலைவராகத் தெரிவான முதலாவது இளையவராகவும், முதலாவது தெற்காசிய சமூகத்தவரகவும் நீதன் சண் இருப்பது பெருமைக்குரியது.

தமது 16 வயதில் பெற்றோருடன் கனடாவில் குடியேறிய நீதன் கடந்த 16 வருடங்களாகக் கனடிய நீரோட்டத்தில் தம்மை இணைத்துப் பல்வேறு பணிகளில் முன்னின்று உழைத்து வருகின்றவர். இரட்டைப் பட்டதாரியான இவர் சில வருடங்கள் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் இளையோர் சேவைத் திட்டங்களில் பிரதான பங்கேற்றுச் செயற்பட்டார். மார்க்கம் கல்விச் சபைக்கு உறுப்பினராக (trustee) தெரிவானதன் வாயிலாக இப்பதவிக்குக் கனடாவில் தெரிவான முதலாவது தமிழர் என்ற சாதனையை நிலைநாட்டினார்.

கனடாவில் ஜனநாயகத் தேர்தல்கள் மூலம் உருவான கனடியத் தமிழர் தேசிய சபையின் உறுப்பினராகவும், உபதலைவராகவும் இவர் இருக்கின்றார். CASSA எனப்படும் கனடிய தெற்காசிய சமூக சேவை அமைப்புகள் கூட்டமைப்பின் நிறைவேற்று இயக்குனராக கடந்த சில வருடங்களாகப் பணியாற்றிவரும் நீதன், கடந்த வருட ஒன்ராறியோ மாகாண சபைத் தேர்தலில் ஸ்காபரோ றூஜ்றிவர் தொகுதியில் என். டி. பி வேட்பாளராகப் போட்டியிட்டு, பன்னிரண்டாயிரத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று இரண்டாமிடத்துக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

Neethan Shan, a prominent Toronto based social justice advocate and the Vice-Chair of the National Council of Canadian Tamils (NCCT) made Tamil Canadian history last month by being elected as the new President of the Ontario New Democratic Party.

Competing against two other candidates, Neethan Shan made Tamil Canadian history by becoming elected and transforming the landscape of Canadian politics.

"Neethan Shan is a distinguished role model for Tamil Canadians and South asian students in general. A mentor for many student leaders in Toronto, Neethan has demonstrated his commitment to community organising over the years," said Krisna Saravanamuttu, spokesperson of the National Council of Canadian Tamils.

"The entire Tamil community is proud of Neethan and his victory represents a huge step forward for Tamil Canadians and the province of Ontario."

Neethan Shan arrived in Canada as a refugee at the age of 16 from the war torn island of Sri Lanka. A committed activist, Mr. Shan has served the people of Scarborough-Rouge River with dedication in different roles, including teacher, social & economic policy advocate and public school board trustee.

Neethan has been in the forefront of Tamil community activism and a strong advocate for the freedom for the Tamil peoples' right to self-determination in the North-East of Sri Lanka. He is a passionate advocate for social services directed at helping children, youth and families.

With deep roots in the community and an unflagging dedication to social development, he has worked tirelessly for the benefit of his neighborhood.

## மைக்ரோசொப்ட் அறிமுகப்படுத்தும் மூன்று வகையான இயங்குதளங்கள்

முன்னணி இயங்குதள உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றாகத் திகழும் மைக்ரோசொப்ட் நிறுவனமானது அண்மையில் விண்டோஸ் 8 எனும் இயங்குதளத்தை அறிமுகப்படுத்தியிருந்தது.

தற்போது இந்த விண்டோஸ் 8 இயங்குதளத்தை மூன்று வகைகளாகப் பிரித்து வெளியிடத் திட்டமிட்டுள்ளது. அதன் அடிப்படையில் Windows 8, Windows 8 Pro, Windows RT ஆகிய இயங்குதளங்கள் x86/64 bites வெளியிடப்படவுள்ளன.

இதில் Windows 8ஐக் காட்டிலும் Windows 8 Pro ஆனது அதிகளவு வசதிகளைக் கொண்டிருக்கும் எனவும் தொடர்ச்சியான கணணிப் பாவனையாளர்கள் இவை இரண்டில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்ய முடியும் எனவும் மைக்ரோசொப்ட் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

Windows RT என அழைக்கப்படும் Windows runtime ஆனது கணணியில் புதிதாக அனுபவத்தைக் கொண்டிருப்பவர்களுக்காக அடிப்படை வசதிகளை மட்டும் உள்ளடக்கியதாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அறிமுகப்படுத்தப்படவிருக்கின்றது. ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழர் தகவல்' முதன்மை ஆசிரியருக்கு ஒன்ராறியோ அரசாங்கத்தின் 'ஜூன் கோல்வூட்' ஞாபகார்த்த 'முதன்மைச் சாதனையாளர்' விருது




கனடாவிலிருந்து கடந்த 22 ஆண்டுகளாக வெளிவரும் 'தமிழர் தகவல்' சஞ்சிகையின் முதன்மை ஆசிரியரும், மூத்த ஊடகவியலாளரும், அரசியல் ஆய்வாளருமான திரு எஸ். திருச்செல்வம் அவர்களுக்கு, கனடாவின் பிரபல்யமான 'ஜூன் கோல்வூட்' ஞாபகார்த்த முன்னிலைச் சாதனையாளர் விருது (Outstanding Achievement Award), ஒன்ராறியோ அரசாங்கத்தினால் வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளது. ரொறன்ரோ எக்ஸிபிஷன் பிளேஸ் 'ஆல்ஸ்ரீம்' மண்டபத்தில் ஏப்ரல் 20ஆம் திகதி காலை இதற்கென ஒழுங்கு செய்யப்பட்ட சிறப்பு வைபவமொன்றில், ஒன்ராறியோ பிரஜாவுரிமை குடிவரவு அமைச்சர் சார்ள்ஸ் சூசா இந்த விருதினை வழங்கிக் கௌரவித்தார்.

கனடாவிலுள்ள இருபது வரையான மைய அமைப்புகளில் கடந்த இரு தசாப்தத்துக்கும் மேலாக ஆற்றி வருகின்ற தன்னார்வப் பணிகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டது. கனடாவில் 2008 முதல் வழங்கப்படுகின்ற இந்த விருதினைப் பெற்ற முதலாவது தெற்காசிய சமூகத்தவர் 'தமிழர் தகவல்' திரு திருச்செல்வம் என்பது குறிப்பிடத்தக்கது. 2007ல் ஒன்ராறியோ அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட 'புதிய குடிவரவாளர் சாம்பியன் விருது' பெற்ற முதலாமவராகவும், 1998ல் கனடிய பல்வின ஊடக அமைப்பின் 'சிறந்த ஊடகவியலாளர்' விருது பெற்ற முதலாவது தமிழ் கனடியராகவும் இவர் விளங்குகின்றார்.

திரு திருச்செல்வம் இலங்கையில் ஈழநாடு, தினகரன் பத்திரிகைகளின் ஆசிரிய பீடத்திலும், இலங்கை வானொலியின் செய்திப் பிரிவிலும் கடமையாற்றிய அனுபவத்தோடு, 1983 ஜுலைக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஈழமுரசு, முரசொலி ஆகிய இரண்டு தினசரிகளை ஆரம்பித்து அதன் நிறுவன அசிரியராகக் கடமையாற்றியவர். இலங்கை-இந்திய இராணுவங்களாலும் அவர்களுக்குத் துணைபோன துரோக அமைப்புகளாலும் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு 1989ல் தாயகத்தைவிட்டு வெளியேறிய வேளையில் யாழ். முரசொலி பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பணிபுரிந்தவர்.

கனடாவின் பிரபல்யமான குளோப் அன்ட் மெயில், ரொறன்ரோ ஸ்டார் உட்படப் பல பத்திரிகைகளில் கடமையாற்றி பிரபல்யமான ஊடகவியலாளராக விளங்கிய ஜூன் கோல்வூட் (June Callwood) அம்மையார், கனடாவின் பிரபல எழுத்தாளர். பல பரிசுகளைப் பெற்ற முப்பது நூல்களை எழுதி வெளியிட்டவர். சிறந்த சமூகச் செயற்பாட்டாளராக விளங்கி பலரதும் அபிமானத்தைப் பெற்ற இவர், 'பென் கனடா' மற்றும் 'கேசி ஹவுஸ்' உட்பட ஐம்பது வரையான லாப நோக்கற்ற சமூக அமைப்புகளை நிறுவி வெற்றிகரமாக இயங்க வைத்தவர். இவரது அளப்பரிய சேவைகளுக்காக கனடாவிலுள்ள பதினாறு பல்கலைக் கழகங்கள் இவருக்குக் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியுள்ளன. கனடிய அரசின் 'ஆடர் ஆப் கனடா' (Order of Canada) உட்பட ஏராளமான விருதுகளை ஜூன் கோல்வூட் பெற்றுள்ளார். ரொறன்ரோவின் வீதி ஒன்றுக்கும், பூங்கா ஒன்றுக்கும் இவரது பெயர் இவர் வாழும் போதே சூட்டிக் கௌரவம் வழங்கப்பட்து. 2007ம் ஆண்டு 82வது வயதில் புற்றுநோய் காரணமாக ஜூன் கோல்வூட் காலமானார். இவரது அரிய சேவைகளைக் கௌரவிக்கும் வகையில் 2008ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் ஒன்ராறியோ அரசாங்கத்தினால் இவரது பெயரில் சமூகப் பணியாளர்களுக்கு 'முதன்மைச் சாதனையாளர் விருது' வழங்கப்படுகின்றது.

## June Callwood (1924 – 2007)

